முச்சந்தி முரளி



"மருண்டவன்
கண்ணுக்கு
கண்டதெல்லாம் டீல்
மாதிரித்தான்
தெரியும்"

Registered as a Newspaper

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 312

வியாழக்கிழமை
03 ஒக்ரோபர் 2024

புரட்டாதி 17 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

## மனித உரிமைப் பேரவையின்
# விசாரணைக்கு ஒத்துழைக்குக
### ஜனாதிபதி அநுரவிடம் கோரிக்கை

**கொழும்பு, ஒக்ரோபர் 3**

**இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பான விசாரணைகளுக்கு ஒத்துழைக்க வேண்டும் என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவிடம் மனித உரிமைகள் கண்காணிப்பகம் கோரிக்கை விடுத்துள்ளது.**

11

## வடக்கு மக்களுக்கு சஜித் தரப்பு நன்றி!



கொழும்பு, ஒக். 3
ஜனாதிபதித் தேர்தலின்போது சஜித் பிரேமதாஸ மீது நம்பிக்கை வைத்த வடக்கு மக்களுக்கு கூட்டணி சார்பில் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம் - என்று ஐக்கிய மக்கள் கூட்டணி யின் பொதுச்செயலாளர் கபீர் ஹாசீம் தெரிவித்துள்ளார்.

'வடக்கு - கிழக்கு மற்றும் தெற்கில் சில தேர்தல்

11

## சிறீதரனோடு அநுர 'டீல்'!
### முஸ்லிம் காங்கிரஸ் குற்றச்சாட்டு



கொழும்பு, ஒக். 3
ஜனாதிபதித் தேர்தலின்போது தமிழ்ப் பொதுவேட்பாளராகக் களமிறங்கிய அரிய நேந்திரனுக்கு ஆதரவளித்த சிறீதரனை, ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க ஏன் சந்திக்கவேண்டும்? அவர்மூலம் சிலவேலை கள் நடந்துள்ளன என்பதையே இது வெளிப்படுத்துகின்றது - என்று

11

## முறைமை மாற்றம் பரவலாக வேண்டும்
### ஜனாதிபதிக்கு மனோ வலியுறுத்து

கொழும்பு, ஒக். 3
ஜனாதிபதி அநுரகுமார முன்னெடுத்துள்ள முறைமை மாற்றங்கள், வெறுமனே

11

## ஒரு கோடியே 7 இலட்சம் சங்குவேலியில் வழிப்பறி

யாழ்ப்பாணம், ஒக். 3
ஒரு கோடியே 7 இலட்சம் ரூபா பணத்துடன் பயணித்தவர்களைத் தாக்கிவிட்டு அந்தப் பணம் கொள்ளையிடப்பட்டுள்ளது.
மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சங்குவேலிப் பகுதியில் நேற்று இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

11

## நாடாளுமன்றத் தேர்தல்; 37 பேர் கட்டுப்பணம்!

கொழும்பு, ஒக். 3
ஸ்ரீலங்கா நாடாளுமன்றத் தேர்தலுக்கு இதுவரை 37 பேர் கட்டுப்பணம் செலுத்தியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
ஸ்ரீலங்கா நாடாளுமன்றத் தேர்தல் நவம்பர் 14 ஆம் திகதி நடைபெறவுள்ளது. இந்தத் தேர்தலுக்கான நடவடிக்கையில் பல்வேறு கட்சிகளும் தீவிரமாக ஈடுபட்டு

11

## 7 நாடுகளின் தூதுவர்கள் ஜனாதிபதியுடன் சந்திப்பு!

கொழும்பு, ஒக். 3
ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவை, நேற்று ஏழு நாடுகளின் தூதுவர்கள் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.
தற்போதைய அரசாங்கம் கொண்டுள்ள, 'அனைத்து நாடுகளுடனும் இருதரப்பு உறவை வலுப்படுத்துதல்' என்ற கொள்கையின் அடிப்படையில் இந்த இருதரப்புச்

11

## புடைவையகத்துள் புகுந்து தீவைப்பு
### விஷமிகள் கைவரிசை நெல்லியடியில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஒக். 3
நெல்லியடியில் உள்ள புடைவையகம் ஒன்று நேற்று இரவு தீக்கிரையாக்கப்பட்டுள்ளதாக பொலிஸாரிடம் முறையிடப்பட்டுள்ளது.

11

## மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை வேண்டும்!
### இந்திய வெளிவிவகார அமைச்சருக்கு தமிழக மீனவர்கள் கடிதம்

கொழும்பு, ஒக். 3
இலங்கைக்கு நாளை வரவுள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர், தமிழக மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று தமிழக மீனவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.
இந்திய வெளிவிவகார அமைச்சருக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்திலேயே, தமிழக மீனவர்கள் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளனர்.
இலங்கைக்கான பயணத்தின்போது தமிழக மீனவர்கள் தொடர்பான

11

## ரூபாவின் பெறுமதி உயர்வு!

கொழும்பு, ஒக். 3
இலங்கை ரூபாவின் பெறுமதி உயர்ந்து வருகின்றது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

11



## நாவாந்துறையில் வீடொன்று தீக்கிரை!

யாழ்ப்பாணம், ஒக். 3
யாழ்ப்பாணம் - நாவாந்துறைப் பகுதியில் நேற்றுப் புதன்கிழமை வீடொன்று முற்றாகத் தீக்கிரையாகியுள்ளது.
வீடு தீப்பற்றி எரிவதைக் கண்ட அயலவர்கள் தீயை அணைக்க முற்பட்டதுடன், இது தொடர்பில் மாநகரசபையின் தீயணைப்புப் படையினருக்கும் அறிவித்தனர். சம்பவ இடத்துக்கு விரைந்த தீயணைப்புப் படை

11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அடம்பன் கொடியும் திரண்டாலே மிடுக்கு

## ரெலோ சுட்டிக்காட்டு

**யாழ்ப்பாணம், ஒக்.3**

**தமிழர் தரப்பில் உள்ளவர்கள் மக்களுடைய பிரச்சினைகளை தீர்க்கக் கூடிய வகையில் ஆசனங்களைப் பெறுவதன் ஊடாகத்தான் புதிய அரசாங்கத்தோடு பேசி ஓர் இணக்கப்பாட்டுக்கு வரமுடியும். எமக்குள் ஒற்றுமை இருந்தால்தான் எங்களின் விடயங்களை சாதிக்க முடியும். அந்தவகையில் ஒரே அணியில் ஒரு பொதுச் சின்னத்தில் திரண்டு போட்டியிடுவதே நன்று.**

-இவ்வாறு வன்னி மாவட்ட நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரும் தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொதுவேட்பாளராகக் களம் இறங்கிய அரியநேந்திரன் 2 இலட்சம் வாக்குகளை பெற்றது என்பது சாதாரண விடயம் அல்ல. நாங்கள் இன்னும் முழுமையாக வேலை செய்திருந்தால் கூடுதலாக வாக்குகளை பெற்றிருக்கலாம் என்பது என்னுடைய கருத்தாக உள்ளது.

அந்த வகையில் பொதுத்தேர்தலில் தமிழ்த் தரப்பு ஓரணியிலே ஒன்றாக வேண்டும். நாங்கள் பிரிந்து நின்று செயற்படுவோமாக இருந்தால் ஆசனங்களை இழப்போம். மக்கள் கோபப்படும் அளவுக்கு எமது செயற்பாடுகள் இருக்கக்கூடாது. தமிழரசுக் கட்சியும் ஒன்றாகச் சேர வேண்டும் என்கின்ற கோரிக்கையை முன் வைத்திருக்கின்றது. நாங்கள் தமிழரசுக் கட்சியிடம் கேட்டுக்கொள்கின்றோம், பொதுச் சின்னத்திலே குறிப்பாக குத்துவிளக்கு சின்னத்தைக் கூட வலியுறுத்தாமல் எல்லோரும் இணைந்து வேறொரு பொதுச் சின்னத்திலே இந்தத் தேர்தலில்பங்குபற்றினால்அதற்கு ஆதரவளிப்போம். எங்களைப்பொறுத்தமட்டில் ஒற்றுமை என்பது காலத்தின் கட்டாயம்- என்றார். (ச-110)



# ஓய்வூதியத்தில் கைவைக்காதீர்

## கம்மன்பில தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.3

நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்களுக்கான ஓய்வூதியம் இரத்துச் செய்யப்படும் என்ற முடிவை தேசிய மக்கள் சக்தி அரசு மறுபரிசீலனை செய்யவேண்டும் என்று நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் உதய கம்மன்பில கோரிக்கை விடுத்துள்ளார்.

நாடாளுமன்றம் கலைக்கப்பட்ட பின்னர் நாமும் சாதாரண பிரஜைகள்தான்.

பாதுகாப்பு அச்சுறுத்தல் உள்ள நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்களுக்கு பாதுகாப்புக் கட்டாயம் வழங்கப்பட வேண்டும். அதேவேளை அரசியல்வாதிகள் ஊழல், மோசடிகளில் ஈடுபடக்கூடாது என்பதற்காகவும், அவர்களின் எதிர்கால வாழ்வுக்காகவுமே ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. அது வழங்கப்படவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-25,44)

# ஐ.தே.க. சின்னம் நாளை அறிவிப்பு

கொழும்பு, ஒக்.3

எதிர்வரும் பொதுத்தேர்தலில் எந்தச் சின்னத்தில் போட்டியிடுவது என்பது தொடர்பில் நாளை அறிவிக்கப்படும் என ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஆசு மாரசிங்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதான கூட்டமொன்று கட்சியின் தலைவர் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பை அடுத்து ஊடகங்களுக்கு கருத்துரைத்தபோதே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார். இந்தச் சந்திப்பின் போது ஐக்கிய மக்கள் சக்தியுடன் கலந்துரையாடல்களை நடத்துதல் மற்றும் கட்சியின் பொதுச்செயலாளர் பதவி உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்தார். (ச)

# இளையோருக்கு இடமளித்து தேர்தலிலிருந்து விலகுகிறேன்

## வினோ எம்.பி.யும் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 03

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடாதிருக்க தீர்மானித்துள்ளதாக வன்னி மாவட்ட நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் வினோநோகராதலிங்கம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தெற்கிலே மக்கள் மத்தியில் குறிப்பாக சிங்கள பெரும்பான்மை மக்கள் மத்தியிலே அரசியல் மாற்றம் ஒன்றின் தேவை உணரப்பட்டது. அதன் விளைவுதான் அநுரகுமார திஸாநாயக்க ஜனாதிபதியாகியமை.

அதைப்போலவே வடக்கு - கிழக்கில் எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலில் தமிழ் மக்களும் மாற்றம் ஒன்றை எதிர்பார்த்து நிற்கின்றனர். அது புதியவர்களையும், இளையோரையும் அந்த வகையில் மக்கள் மனங்களின் உணர்வுகளைப் புரிந்து கொண்டு அதற்கு வழிவிடவுள்ளேன்.

இளைஞர்களுக்கும், புதியவர்களுக்கும் இடம் கொடுப்பதே அரசியல் கட்சிகளினதும், தலைவர்களினதும் தலையாய கடமையாக இருக்கவேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார். (ச-110,56)

# திலித்துடன் ரொஷான்

வவுனியா, ஒக். 03

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் சுயேச்சையாகப் போட்டியிட்ட முன்னாள் அமைச்சர் ரொஷான் ரணசிங்க, திலித் ஜயவீர தலைமையிலான மவ்பிம ஜனதாக கட்சியில் இணைந்துள்ளார். அவருக்குக் கட்சியின் தவிசாளர் பதவி வழங்கப்பட்டுள்ளது. கடந்த பொதுத்தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சி சார்பிலேயே ரொஷான் ரணசிங்க நாடாளுமன்றம் தெரிவாக இருந்தார்.(ச-44)

# பலமிழக்கிறது யானை

கொழும்பு, ஒக்.3

ருவான் விஜேவர்த்தன, நவீன் திஸாநாயக்க உள்ளிட்ட குழுவினர் ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைய தற்போது கலந்துரையாடி வருகின்றனர் என்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்கள் பலர் கட்சியைவிட்டு விலகி சஜித் பிரேமதாஸவுடன் இணையத் தீர்மானித்துள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

சஜித் மற்றும் ரணிலின் இணக்கம் தொடர்பில் எந்தவொரு எதிர்ப்பார்ப்பும் இல்லாத நிலையிலேயே ஐக்கிய தேசியக் கட்சியில் இந்தத் தாவல்கள் தோன்றியுள்ளன.

தனக்கு பிரதமர் பதவி மட்டுமல்ல அமைக்கப்படும் புதிய கூட்டணியின் தலைமைப் பதவி வேண்டும் எனவும், ரணில் விக்கிரமசிங்க ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து நீங்க வேண்டும் எனவும், அமைக்கப்படும் கூட்டணியின் பொதுச்செயலாளரை நியமிக்கும் பொறுப்பு தனக்கு வேண்டும் எனவும் சஜித் பிரேமதாஸ ஆணித்தரமாகத் தெரிவித்துள்ளார்.

இதனால் சஜித் மற்றும் ரணில் இணைவது ஒருபோதும் இடம் பெறாது என உறுதிசெய்யப்பட்டுள்ளது.

இந்த நிலையிலேயே ரணில் தரப்பில் அடுத்த அரசியல் நகர்வு தற்போது இடம்பெற்று வருகின்றது என்றும் அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ச)

# மரபுரிமைச் சின்னங்களை மீளவும் ஒப்படையுங்கள்

## நெதர்லாந்திடம் கோரிக்கை

கொழும்பு, ஒக். 3

ஒல்லாந்தர் ஆட்சியில் ஒல்லாந்தர்களால் எடுத்துச்செல்லப்பட்ட மேலும் ஒரு தொகுதி மரபுரிமைச்சின்னங்களை மீள ஒப்படைக்குமாறு நெதர்லாந்து அமைச்சர் எப்போ புரூயின்சிடம் நெதர்லாந்துக்கான இலங்கைத் தூதுவர் ரேகா குணசேகர கோரிக்கை விடுத்துள்ளார்.

அதற்கு பதிலளித்த நெதர்லாந்து அமைச்சர் எப்போ புரூயின்ஸ், ஒல்லாந்தர்களால் எடுத்துச்செல்லப்பட்ட இலங்கையின் மரபுரிமைச் சின்னங்கள் உரிய இடத்திலேயே இருக்க வேண்டுமென பதிலளித்துள்ளார்.



கடந்த டிசெம்பர் மாதம் ஒல்லாந்தர் ஆட்சியில் ஒல்லாந்தர்களால் எடுத்துச்செல்லப்பட்ட மரபுரிமைச்சின்னங்களை மீள நெதர்லாந்து அரசாங்கம் ஒப்படைத்திருந்தது.

நெதர்லாந்து அரசாங்கம் மீள ஒப்படைத்த மரபுரிமைச்சின்னங்கள் தற்போது கொழும்பு அருங்காட்சியகத்தில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெங்கு ஒழிப்புச் செயற்றிட்டம் கிளிநொச்சியில் ஆரம்பம்

**கிளிநொச்சி, ஒக்.3**

**வடகீழ் பருவமழை ஆரம்பித்துள்ள நிலையில் கிளிநொச்சி மாவட்டத்தில் டெங்குத் தொற்றைக் கட்டுப்படுத்த மேற்கொள்ளவேண்டிய முன்னாயத்த நடவடிக்கைகள் தொடர்பில் ஆராயப்பட்டுள்ளன.**

கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் டெங்கு குழுக் கூட்டம் மாவட்ட பதில் மாவட்டச் செயலர் எஸ்.முரளிதரனின் தலைமையில் நேற்று இடம்பெற்றது.
இதன்போது மாவட்ட தொற்று நோயியல் மருத்துவ அதிகாரி க.றஞ்சன் டெங்கு நோய்தாக்கம் மற்றும் மாவட்டத்தின் தற்போதைய நிலைமை தொடர்பில் விளக்கமளித்தார்.
இதன்போது மாவட்டத்தின் அடையாளப்படுத்தப்பட்டுள்ள முக்கியமான இடங்களில் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டத்தினை முன்னெடுத்துச் செல்வதற்காக குழுக்கள் அமைக்கப்பட்டன. மேலும் மழைகாலம் காரணமாக டெங்கு நோய் பரவும் அபாயமுள்ள பகுதிகளை கண்டறிந்து வாராந்த முன்னேற்ற அறிக்கைகளை சமர்ப்பிப்பது பற்றியும் கலந்துரையாடப்பட்டது. (ச-113)

## பல்கலை விண்ணப்பம் சமர்ப்பிக்கக் காலக்கெடு

கொழும்பு, ஒக்.3
2023/2024 ஆம் ஆண்டுக்கு பல்கலைக்கழகங்களுக்குவிண்ணப்பிக்கத் தகுதி பெற்ற மாணவர்கள் இந்த மாதம் 8 ஆம் திகதி வரை தமது விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கலாம் என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது. மேலதிக விவரங்களை www.ugc.ac.lk என்ற இணையத் தளத்தினூடாகப் பெற்றுக்கொள்ளலாம் எனவும் பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது. (ச-6)



## தமிழர் மரபுரிமைக் கட்சி கட்டுப்பணம் செலுத்தல்

வவுனியா, ஒக்.03
நாடாளுமன்றத் தேர்தலில் வன்னி தேர்தல் தொகுதியில் சுயாதீனமாக போட்டியிடுவதற்கான கட்டுப் பணத்தை தமிழர் மரபுரிமை கட்சியினர் நேற்று வவுனியா தேர்தல்கள் ஆனைக்குழுவில் செலுத்தியுள்ளனர்.
அந்தக் கட்சியின் தலைவர் நேசராசா சங்கீதன் தலைமையில் குறித்த கட்டுப்பணம் செலுத்தப்பட்டது.
தமது கட்சியானது வடக்கு மற்றும் கிழக்கில் அனைத்து மாவட்டங்களிலும் சுயேச்சையாகப் போட்டியிடவுள்ளதாக அந்தக் கட்சியின் தலைவர் தெரிவித்தார். (ச-110)



## வவுனியா பிரதேச செயலாளராக பிரதாபன் பதவியேற்பு

வவுனியா, ஒக். 03
வவுனியா பிரதேச செயலகத்தில் காணப்பட்ட பிரதேச செயலாளர் பதவி வெற்றிடத்தை நிவர்த்தி செய்யும் வகையில் வவுனியா நெடுங்கேணி பிரதேச செயலாளராகக் கடமையாற்றிய இ.பிரதாபன் நியமிக்கப்பட்டுள்ளார்.
வவுனியா பிரதேச செயலகத்தின் புதிய பிரதேச செயலாளரான இ. பிரதாபன் நேற்று தனது கடமைகளைப் பொறுப்பேற்றார்.
கடமையைப் பொறுப்பேற்கும் நிகழ்வில் வவுனியா மாவட்டச் செயலர் பி.எ. சரத்சந்திர, வவுனியா உதவித் தேர்தல் ஆணையாளர், பிரதேச செயலக ஊழியர்கள், கிராம சேவையாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ச-18)

## வடக்கு சுற்றுலாத்துறை ஆளுநர் ஆராய்வு

யாழ்ப்பாணம், ஒக்.03
வடக்கு மாகாண மட்டத்தில் முன்னெடுக்கப்படும் சுற்றுலாத்துறை தொடர்பான விடயங்களை ஆராயும் கூட்டம் மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தலைமையில் ஆளுநர் செயலகத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.
கூட்டத்தில் வடக்கு மாகாணத்தில் சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதன் மூலமாக வடக்கு மாகாண மக்கள் அதிகளவு வருமானத்தை ஈட்டுவதற்கான சாதகமான நடவடிக்கை தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டது. (ரி-66)

## சட்டவிரோத வாகன இறக்குமதி பறிமுதல் செய்வதற்கு உத்தரவு

கொழும்பு, ஒக்.3
கடந்த 2015 ஆம் ஆண்டுக்குப் பின்னர் சட்டவிரோதமான முறையில் சொகுசு வாகனங்களை இறக்குமதி செய்து 50 பில்லியன் ரூபாவுக்கு மேல் நஷ்டத்தை ஏற்படுத்தியவர்களை உடனடியாக கைது செய்து நீதிமன்றத்தில் முற்படுத்தவும் வாகனங்களை பறிமுதல் செய்யவும் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது. கொழும்பு பிரதான நீதிவான் திலின கமகே இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவுக்கு நேற்று இந்தப் பணிப்புரையை விடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ச)



## தினம் தெரியுமோ?

ஆடறுக்க முன்னம் காதறுத்த கதையா, எல்லாத்துக்கும் எங்கட ஆக்களுக்கு கடும் அவசரம். முந்தி பிள்ளையளுக்கு அஞ்சு வயசாகேக்கதான் அரிவரி படிக்க அனுப்புவினம். இப்ப என்னெண்டால் 2 வயது முடியமுதலே பிள்ளையளை நேர்சரியில சேர்க்கிற வருத்தம் பரவிட்டுது. இப்பிடியே போனால் பிள்ளை பிறந்து துடக்குக் கழிவு முடிஞ்சவுடனேயே நேர்சரியில சேர்த்தாலும் சேப்பினம். தப்பித்தவறி ஆருக்கும் அபிமன்யு தன்ர தாயின்ர வயித்தில இருக்கேக்கையே சக்கரவியூகத்தை உடைச்சு உள்ளுக்க போற வித்தையை படிச்சவன் எண்டு தெரிஞ்சால், பிள்ளைத்தாச்சியா இருக்கிறவையையும் நேர்சரிக்கு விடக்கூடும். அந்தளவுக்கு எல்லாத்தையும் முந்திக்கொண்டு செய்து முடிச்சிடோணும் எண்ட அவாவில எங்கட சனம் திரியுது. இந்தப் பழக்கத்தை வைச்சு எப்பிடிக் காசாக்கலாம் எண்டு இன்னொரு குரூப்பும் அலையுது.

பருவத்தே பயிர்செய்யிற காலமெல்லாம் மலையேறிப்போனதால, பிள்ளையளை வெம்பவைக்கிற மாதிரி சில ரியூட்டரிகள் நடக்கினம். இப்பதான் அஞ்சாம் ஆண்டு கொலசிப் எக்ஸாம் முடிஞ்சு, அந்தப் பிள்ளையள் நிம்மதியா மூச்சு விடுதுகள். கொலசிப் எக்ஸாமுக்கு பிள்ளையள் படுறபாடு எல்லாருக்கும் தெரியும் தானே. மூண்டாம் ஆண்டிலேயே இந்தக் கொலசிப் எக்ஸாம் கொலைவெறி தொடங்கிடும். வெள்ளென விடியக்காலமை 4 மணிக்கே எழும்பி படிச்சிட்டு, அப்பிடியே பள்ளிக்கூடம் ஓடோணும், பள்ளிக்கூடம் விட்டு வீட்ட வந்து உடுப்பை மாத்திக் கொண்டு, சாப்பிடக்கூட நேரமில்லாம அப்பிடியே புத்தகம்,கொப்பியோட ரியூசனுக்குப் போனால் பொழுதுபடத்தான் வீட்ட வரலாம். அதுக்குப் பிறகும் நிம்மதியா இருக்கேலாது, பெர்சனல் கிளாஸுக்கு ஓடவேணும். அது முடிய எப்பிடியும் இரவு பத்து மணியாப்போடும். அதுக்குப் பிறகு விடிய 2 மணிமட்டும் 'பாஸ் பேப்பர்' செய்ய வேணும். இப்பிடி அன்னம் தண்ணி இல்லாமல், நல்ல நித்திரை இல்லாமல், விளையாடப் போகமுடியாமல் அந்தப் பிஞ்சுகள் ரண்டரை வருசமா பட்ட தண் டனை எக்ஸாமோட தான் முடிவுக்கு வந்திருக்குது.

படிப்பு, படிப்பு எண்டு அதுக்கையே சிறையிருக்காமல் இனி கொஞ்சநாளைக்கு தாங்கள் ஆசைப்பட்ட இடங்களுக்குப் போறது, விளையாடுறது, படம் பாக்கிறது எண்டு அந்தப்பிள்ளையள் சந்தோசமா இருக்கிறது உந்த ரியூசன்காரருக்கு பிடிக்கேலை போல. அஞ்சாம் ஆண்டின்ர மூண்டாம் தவணை முடிஞ்சு, ஆறாம் ஆண்டுக்கு அந்தப்பிள்ளையள் அடுத்த வருசம் தான் போவினம். ஆனால் இப்பவே சில பேமஸான ரியூட்டரிக்காரர் ஆறாம் ஆண்டுக்கு புது வகுப்புத் தொடங்கி, ஆக்களையும் சேர்க்க வெளிக் கிட்டிருக்கினமாம். அதால பிள்ளையத்திரும்ப புத்தககங்களைச் சுமந்துகொண்டு பள்ளிக் கூடத்துக்கும், ரியூட்டரிக்கும் மாறி மாறி ஓடத் தொடங்கியிருக் கினம். இப்பவே ஆறாம் ஆண்டுக்கு வகுப்புத் தொடங் கினாத்தான் தங்களிட்ட படிக்கிற பிள்ளையள் பள்ளிக்கூடத்தில ஆறாம் ஆண்டுக்கு ரீச்சர்மார் படிப்பிக்கேக்க எல்லாக் கேள்விக்கும் முந்திக் கொண்டு பதில் சொல்லுவினமாம் எண்டு ரீயூட்டரிக் காரர் பெற்றாரின்ர மண்டையைக்கழுவியிருக்கினம். பிள்ளை யளின்ர மூளைக்கு இப்பிடி மருந்தடிச்சுப் பழுக்க வைக்கிற வேலையால அந்தப் பிள்ளையளின்ர உளவியலெல்லோ பாதிக்கும்? இதைத் தட்டிக்கேக்க ஒருத்தருமே இல்லையா?



- பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருதிக்கொடை

யாழ்ப்பாணம், ஒக். 3
மானிப்பாய் ஸ்ரீ சத்ய சாயி சேவா நிலையம் நடத்தும் இரத்ததான முகாம் எதிர்வரும் 6ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு தொடக்கம் நண்பகல் 12 மணி வரை மானிப்பாய், சோதி வேம்படி லேனில் அமைந்துள்ள ஸ்ரீ சத்ய சாயி சேவா நிலையத்தில் நடைபெறவுள்ளது. (ச-22)

# 12,800 ஹெக்ரேயரில் யாழில் பெரும்போகம்

யாழ்ப்பாணம், ஒக். 3
யாழ்ப்பாணக் குடாநாட்டில் இம்முறை பெரும்போக நெற்செய்கை 12 ஆயிரத்து 800 ஹெக்ரேயர் நிலப்பரப்பில் மேற்கொள்ளப்படவுள்ளது என மாவட்ட விவசாயத் திணைக்களம் தெரிவித்துள்ளது.
இதற்கான முன்னாயத்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
நெற்செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு கமநல சேவை நிலையங்கள் ஊடாக விதை நெல்லும் வழங்கப்பட்டு வருகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-17)



திருநெல்வேலியில் அமைந்துள்ள கூட்டுறவு அபிவிருத்திச் சங்க 'யாழ்கோ'வின் தலைமை அலுவலகத்துக்கு முன்பாக 'யாழ்கோ' சிற்றுண்டி விற்பனை நிலையம் ஒன்று கடந்த செவ்வாய்க்கிழமை திறந்து வைக்கப்பட்டுள்ளது. கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கே.சந்திரசேகரன் நிகழ்வில் கலந்துகொண்டு விற்பனை நிலையத்தைத் திறந்து வைத்தார். (ச)

# தனிநாயகம் அடிகள் நினைவரங்கம்

யாழ்ப்பாணம், ஒக். 3
யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம் நடத்தும் தமிழ்த்தூது தனிநாயகம் அடிகள் நினைவரங்கம் நாளை வெள்ளிக்கிழமை மாலை 4 மணியளவில் யாழ்ப்பாணம் பிரதான வீதியில் அமைந்துள்ள திருமறைக்கலாமன்றத்தின் கலைத்தூது கலையகத்தில் யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்க உபதலைவர் அருட்பணி ஜெறோ செல்வநாயகம் அடிகளார் தலைமையில் இடம்பெறவுள்ளது.
நிகழ்வில் யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கத் தலைவர் பேராசிரியர் தி.வேல்நம்பி தொடக்கவுரையையும், யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கப் பெருந்தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாஸ் வாழ்த்துரையையும், யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியின் குரு மாணவன் அன்ரனிகுமார் அனோஜன் மாணவர் உரையையும் ஆற்றுவர்.
நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கல்வியியல்துறை விரிவுரையாளர் இ.சர்வேஸ்வரா இலங்கைப் பல்கலைக்கழக முறைமையில் சேர்.பொன் அருணாச்சலத்தின் வகிபாகம் தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளாரை உள்நிறுத்திய பார்வை எனும் தலைப்பில் நினைவுப் பேருரை ஆற்றுவார்.
யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கப் பொதுச் செயலாளர் ச.லலீசன் நினைவுப் பேருரையாளருக்கான அறிமுகத்தை நிகழ்த்துவார். திருமறைக் கலாமன்றப் பிரதி இயக்குநர் யோன்சன் ராஜ்குமார் கருத்துரையை வழங்குவார். (ச-66)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** தொடங்கும் காரியங்கள் சாதகமாக முடியும். சிலருக்கு திடீர் செலவுகளால் கையிருப்பு குறையும். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எதுவும் இன்று எடுக்கவேண்டாம். நண்பர்களின் சந்திப்பு மகிழ்ச்சி தருவதாக இருக்கும்.

**இடபம்:** புதிய முயற்சிகள் சாதகமாகும். நண்பர்களால் அனுகூலம் உண்டாகும். சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. வாழ்க்கைத்துணைவழி உறவினர்களால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும்.

**மிதுனம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். துணிச்சலாக முடிவெடுப்பீர்கள். எதிர்ப்புகளும் இடையூறுகளும் நீங்கும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. வியாபாரத்தில் சக வியாபாரிகளால் ஏற்பட்ட உபத்திரவங்கள் நீங்கும்.

**கடகம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். உடல் ஆரோக்கியத்தில் கூடுதல் கவனம் தேவை. சிறுசிறு குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். தேவையற்ற செலவுகள் ஏற்படும். உடல் அசதி ஏற்படக்கூடும்.

**சிம்மம்:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. உறவினர்கள் வருகையால் மகிழ்ச்சி உண்டாகும். காரியம் அனுகூலமாகும். சகோதரர்கள் உதவி கேட்டு வருவார்கள். உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும்.

**கன்னி:** தேவையான பணம் இருப்பதால் செலவுகளைச் சமாளித்துவிடுவீர்கள். ஏற்பட்டிருந்த மனக்கசப்புகள் நீங்கி, அந்நியோன்யம் அதிகரிக்கும். தாய்மாமன் வழியில் சுபச்செலவு ஏற்படும். சங்கடங்கள் ஏற்படக்கூடும்.

**துலாம்:** பல வகைகளிலும் அனுகூலமான நாளாக இருக்கும். பணஉதவி கிடைக்கும். பிள்ளைகள் மூலம் பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. வீண் விவாதம் செய்வதைத் தவிர்ப்பது அவசியம். முயற்சிக்கு ஒத்துழைப்பு கிடைக்கும்.

**விருச்சிகம்:** மனதுக்கு மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் நிகழும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. காரியம் அனுகூலமாக முடியும். மன உறுதியுடன் செயற்படுவீர்கள். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**தனுசு:** எதிர்பார்த்த பணவரவு இருந்தாலும், திடீர் செலவுகளும் ஏற்படும். பிள்ளைகளால் சில சங்கடங்கள் ஏற்பட்டு நீங்கும். மனஸ்தாபம் ஏற்படக்கூடும். சற்று எச்சரிக்கையாக நடந்து கொள்வது அவசியம்.

**மகரம்:** மகிழ்ச்சியான நாள். குடும்பப் பொறுப்புகளில் உற்சாகமாக ஈடுபடுவீர்கள். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. பேசும்போது பொறுமை அவசியம். மகாவிஷ்ணுவை வழிபட, மகிழ்ச்சி கூடுதலாகும்.

**கும்பம்:** இன்று எதிலும் பொறுமையுடனும் சிந்தித்தும் செயற்படவேண்டிய நாள். முக்கியமான முடிவுகள் எடுப்பதைக் கண்டிப்பாகத் தவிர்த்துவிடவும். உறவினர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**மீனம்:** பணவரவுடன் திடீர் செலவுகளும் ஏற்படும். வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி உண்டாகும். வீண் அலைச்சலைத் தவிர்ப்பது நல்லது. சுபச்செலவுகள் ஏற்படும். மற்றவர்களுடன் இணக்கமான அணுகுமுறை அவசியம்.

# நற்பலன்களை அளிக்கும் நவராத்திரி

மதுரகவி. காரை.எம்.பி. அருளானந்தன்

புரட்டாதி மாதத்தில் வரும் மஹாளய அமாவாசையை அடுத்து பிரதமை முதல் 9 நாள்களுக்கு செய்யப்படும் நவராத்திரி எனப்படும் தேவி வழிபாடு மிகச்சிறப்பானது. இதில் முதல் மூன்று நாள்களிலும் ஆதி பராசக்தியை துர்க்கையாகவும், அடுத்து 3 நாள்களில் லட்சுமியாகவும், இறுதி மூன்று தினங்கள் சரஸ்வதியாகவும் வழிபடுகின்றோம்.



**துர்க்கை அம்பாள்**

புரட்டாதி மாதம் அஷ்டமி திதியில் துர்க்கனை அழித்ததால் இவள் துர்க்கை. சண்டமுண்டனை சம்ஹாரம் செய்ததால் இவள் சாமுண்டி. குரு என்ற அசுரனை அழித்ததால் இவள் காளராத்திரி. மகிஷனை அழித்ததால் மகிஷாசுரமர்த்தினி இப்படியாக அம்பிகையின் பெயர்கள் ஆயிரம் இருக்கின்றன. இவள் வீரத்தை வழங்கும் தாயாவாள்.

**இலக்குமி வழிபாடு**

கிரியா சக்தியாகிய இலக்குமியை சிவப்பு அல்லது பச்சை நிறமுடையவளாகவும், செந்தாமரை மலரில் வீற்றிருந்து கஜேந்திரன் எனும் யானையினால் அபிஷேகம் செய்யப்பெறுபவளாகவும், பாவனை செய்து வணங்குகின்றனர். இவளே மக்கள் விரும்புவதாகிய இவ்வுலக யோகங்களுக்குள் சிறந்த தானம் எனக் கூறும் எண்வகை பொருட்செல்வங்களுக்கும் உரியவளாவாள்.

**சரஸ்வதி வழிபாடு**

ஞானா சக்தியாக விளங்குபவள் கலைமகள். இவள் அறிவுமயமானவள். அறிவுக்கு உறைவிடமாகிய சரஸ்வதியானவள் என்றும் வெள்ளைக்கமலத்தில் வீற்றிருந்து வெண்ணிற வீணை, வெண்ணிற மணி மாலை முதலியவற்றை கையில்கொண்டு மற்றும் வெண்ணிற ஆபரணங்களை அணிந்தும் விளங்குகின்றாள். கல்வியில் சிறந்த காளமேகப்புலவர் கலைமகளின் வடிவினை

*"வெள்ளைக்கலை உடுத்து வெள்ளைப்பணிபூண்டு*
*வெள்ளைக்கமலத்துள் வீற்றிருப்பாள் வெள்ளை*
*அரியாசனத்தில் அரசரோ டென்னைச்*
*சரியாசனம் வைத்த தாய்"*

எனப் போற்றுகின்றார். கல்விக்கும் கலைக்கும் அதிபதியாக விளங்குபவள் கலைமகள். இவ்வாறாக மும்மூன்றாக ஒன்பது இரவுகளிலும் சக்தியின் முக்குணங்களாகிய தாமசம, இராசதம,சாத்வீகம் ஆகியன துலங்கும் வகையிலும் முதல் மூன்று நாள் இரவும் வீரச்செயலுக்கேற்ற இச்சாசக்தியாகிய சிவப்பு நிறங்கொண்ட உமை துர்க்கை வடிவிலும் , அடுத்த மூன்று இரவும் இரக்க செயலுக்குரிய பச்சை நிறங்கொண்ட கிரியாசக்தி திருமகளாகிய இலக்குமி வடிவிலும் மீதி மூன்று நாள் இரவிலும் ஞான சக்தி எனும் வெண்ணிறங்கொண்ட கலைமகளாகிய சரஸ்வதி வடிவிலும் பாவனை செய்து வழிபாடாற்றுகின்றோம். இத்தகு சக்தி வழிபாட்டில் மேன்மையை புலப்படுத்தும் நவராத்திரி, ஆலயங்களிலும் இல்லங்களிலும் வேலைப்பணிமனைளிலும் பக்தி பூர்வமாக கொண்டாடப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை
உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## முறைமை மாற்றம் யாதெனில்...!

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் முறைமை மாற்றம் (சிஸ்டம் சேஞ்ச்) தமிழர் தாயகத்திலும், மலையகத்திலும்கூட ஆரம்பிக்கப்பட வேண்டும். அப்போதுதான் இதுவொரு உண்மையான முறைமை மாற்றமாக இருக்கும் என்று வலியுறுத்தியுள்ளார் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான மனோகணேசன். வடக்கு - கிழக்கு மக்களுக்கும், மலையகத் தமிழர்களுக்கும் அரச அனுதாபங்கள் தேவையில்லை. நியாயம்தான் தேவை என்றும் அவர் ஆழமாக வலியுறுத்தியிருக்கின்றார்.

ஜனாதிபதியாகப் பொறுப்பேற்ற நாள்முதல், ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க பல்வேறு ஆக்கபூர்வமான அறிவிப்புகளை விடுத்துள்ளார். மக்கள் நலத்திட்டங்களை அவர் ஆரம்பித்திருக்கின்றார். அரசியல் சீர்திருத்தம் தொடக்கம் கல்விச் சீர்திருத்தம் வரையில் அவர் அனைத்திலும் தன் தொலைநோக்கான சிந்தனையைச் செயற்படுத்தத் தலைப்பட்டிருக்கின்றார். ஜனாதிபதி, முன்னாள் ஜனாதிபதிகள், அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான வரப்பிரசாதங்கள் குறைக்கப்படுவதிலும் கண்ணும் கருத்துமாக இருக்கின்றார். அத்தனையும் வரவேற்கப்பட வேண்டியதே. அதில் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் மனோகணேசனுக்கு எப்படியோ அப்படித் தமிழர்களுக்கும் மாற்றுக் கருத்தில்லை. ஆனால், ஜனாதிபதி அநுர முன்னெடுத்துக் கொண்டிருக்கும் அத்தனை சீர்திருத்தங்களும் ஊழலுக்கு எதிரானதாகவும், ஒட்டுமொத்த இலங்கையர்களும் பெருமைப்படக்கூடியதாகவும் தான் இருக்கின்றதே அன்றி, வடக்கு -கிழக்குத் தமிழர்களும், மலையகத் தமிழர்களும் வேண்டிய - விரும்பிய - முறைமை மாற்றங்கள் இன்னமும் செயற்படுத்தப்படவில்லை என்பதே உண்மை.

மலையக மக்களின் அடிப்படை ஊதியம் தொடர்பில் அடுத்தடுத்த வர்த்தமானி அறிவித்தல்கள் வெளிவந்திருக்கின்றனவே அன்றி அந்தப் பிரச்சினைகள் இன்னமும் நிவர்த்திக்கப்பட்டதாக இல்லை. 200 வருட வாழ்வுரிமையைக் கொண்டுள்ள மலையக மக்களில் பல்லாயிரம் பேர் இன்னும் ஓர் அங்குல நிலமேனும் இல்லாமல் பரிதவிக்கும் படலமும் தற்போதுவரை தொடர்ந்துகொண்டேதான் உள்ளது. நாட்டின் 'ஏற்றுமதிப் பொருளாதாரத்தை'த் தீர்மானித்துக் கொண்டிருக்கும் மலையகமக்களின் குருதியை அட்டைகள் மட்டும் உறிஞ்சவில்லை. மாறாக பெருந்தோட்டக் கம்பனிகளும் தாராளமாகவே உறிஞ்சிக் கொண்டிருக்கின்றன. ஈழத்தமிழர்களின் வாழ்வோ 'யாரொடு நோவோம், யார்க்கெடுத்துரைப்போம்' எனும் கதியில் பயணப்பட்டுக் கொண்டிருக்கின்றது. ஆக்கிரமிக்கப்பட்ட நிலங்களுக்கு இன்னமும் விடிவொன்று வாய்க்கவில்லை. இனவாதப் பூதம் இன்னமும் தன் கோரப்பற்களைக் கொண்டு பசியாற்றியதாக இல்லை. அரசியல்கைதிகள் விடுதலை, காணாமலாக்கப்பட்டோர் விவகாரம், மறைக்கப்படும் மனிதப் புதைகுழிகள் என்று எங்கு பார்த்தாலும் பிரச்சினைகளும் துன்பங்களும் ஏமாற்றங்களும்தான் மிச்சசொச்சமாக இருக்கின்றன.

இவ்வாறிருக்கையில், ஜனாதிபதி அநுர மேற்கொள்ளும் முறைமை மாற்றங்களை 'நெல்லுக்கு இறைத்த நீர், வாய்க்கால் வழியோடி புல்லுக்கும் பொசிந்தாற்போல்' தான் தமிழர்கள் அனுபவிக்க வேண்டியிருக்கின்றது. அன்றி, தமிழ் மக்களுக்கும், மலையக மக்களுக்குமான பிரச்சினைகளுக்குரிய பிரத்தியேக முறைமை மாற்றங்களைச் செயற்படுத்தும்போதுதான் 'எங்கள் ஜனாதிபதி' என்ற ஆர்ப்பரிப்பை அந்த மக்கள் கூட்டத்திலிருந்து ஜனாதிபதி அறுவடை செய்யக்கூடியதாக இருக்கும். அந்த முறைமை மாற்றங்கள்தான் ஆத்மார்த்தமானவையாகவும் இருக்கும். அதற்கு ஜனாதிபதி அநுர தயாரா என்பதுதான் இப்போதுள்ள கேள்வி?




# அதிக கட்டணம் வசூலிக்கும் பேருந்துகள் மீது நடவடிக்கை

**கொழும்பு, ஒக்.03**

**திருத்தப்பட்ட பஸ் கட்டணத்தை விட அதிக கட்டணம் வசூலிக்கும் பஸ்களுக்கு எதிராக இன்று முதல் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.**

அறிவிக்கப்பட்ட கட்டணத்தை விட அதிக கட்டணம் வசூலிக்கும் பஸ்கள் குறித்து பயணிகள் அறிவிக்கலாம்.

மாகாணங்களுக்கு இடையேயான தனியார் பஸ்கள் தொடர்பாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் தொலைபேசி இலக்கம் 1955 அல்லது வட்ஸ் அப் இலக்கம் 071 25 95 555 இற்கு பயணிகள் முறைப்பாடுகளை அளிக்கலாம்.

இலங்கை போக்குவரத்துச் சபையின் பஸ்கள் மற்றும் மாகாண பஸ் சேவை வழங்குநர்கள் தொடர்பான சம்பந்தப்பட்ட மாகாண அதிகார சபைக்கு 1958 என்ற தொலைபேசி இலக்கத்தின் ஊடாக முறைப்பாடுகளை மேற்கொள்ளமுடியும் என்றும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் நவோமி ஜயவர்த்தன தெரிவித்தார். (ச)

## கட்டுநாயக்க கட்டுமானம் ஜப்பான் வசம்

ரியாத், ஒக்.3

கட்டுநாயக்க விமான நிலையத்தின் இரண்டாவது முனைய கட்டுமானப்பணிகள் ஜப்பானிடம் மீள ஒப்படைக்கப்பட்டுள்ளன. ஜப்பானிய நிறுவனமான ஜிகா கட்டுமானப்பணிகளை நேற்றுமுன்தினம் ஆரம்பித்துள்ளது.

தொலைக்காட்சி சேவையை டிஜிற்றல் மயப்படுத்தும் பணிகளும் ஜப்பானிய அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

முன்னதாக ரணில் அரசாங்கம் கட்டுநாயக்க விமான நிலையத்தின் இரண்டாவது முனைய கட்டுமானப்பணிகளை ஜப்பானிடம் வழங்குவதாக உறுதியளித்து விட்டு இறுதி நேரத்தில் சீனாவுக்கு வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-6)

## வெற்றிலை விலை உயர்வு

கொழும்பு, ஒக்.3

60 ரூபாவாக இருந்த வெற்றிலை தற்போது 130 ரூபாவாக உயர்ந்துள்ளது. வெற்றிலை உற்பத்திவீழ்ச்சியுற்றதன் காரணமாக விலையை உயர்த்த வேண்டிய நிலை ஏற்பட்டதாக, வெற்றிலை வியாபாரிகள் தெரிவித்துள்ளனர். (ச)

## பஸ் கட்டணம் குறைப்பு

கொழும்பு, ஒக்.3

பஸ் கட்டணத்தை நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரும் வகையில் 4.24 சதவீதத்தால் குறைப்பதற்குத் தீர்மானித்துள்ளதாகத் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

எரிபொருள் விலை குறைக்கப்பட்டதையடுத்து இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. அதன்படி, ஆரம்ப கட்டணம் 27 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளதாகத் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (ச)

## கொள்கலன் காவுகை; கட்டணங்கள் குறைப்பு

கொழும்பு, ஒக்.3

எரிபொருள் விலை குறைக்கப்பட்டமைக்கு அமைய கொள்கலன் போக்குவரத்துக் கட்டணம் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நள்ளிரவு முதல் 4 வீதத்தால் குறைக்கப்பட்டுள்ளதாக கொள்கலன் வாகன உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அரசாங்கம் எரிபொருள் விலையை குறைத்தமைக்கு அமைய இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கொள்கலன் போக்குவரத்து கட்டணத்தை 4 சதவீதத்தால் குறைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## நாளை

04.10.2024

வெள்ளிக்கிழமை - புரட்டாதி - 18

சுபநேரம் : 06.02- 07.32

ராகுகாலம் : 10.32- 12.02

## நாளொரு நல்வார்த்தை

புதிய தீர்வுகளை எட்டவில்லை என்றால், கண்டிப்பாக புதிய தீமைகளை எதிர்கொள்ளவேண்டும்.

- பிரான்சிஸ் பெக்கான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த. சாதாரண தரப் பெறுபேறுகள்

## யாழ். மத்திய கல்லூரி

கோ. ஆகாஷ் 9ஏ, சு. மொகமட் சிஃபான் 9ஏ, பி. சேவியர் 8ஏ 2பி ,ம. கஜப்பிரியன் 8ஏ 2பி, ஜீ. ஜதுமிதன் 8ஏ சி , மு. கஜரதன் 7ஏ பி சி , ஜெ. ரிதிக்ரோஷன் 7ஏ பி சி, சி. ஆகாஷ் 7ஏ பி சி , கி. ஜான்சன் வசந்தன் 7ஏ பி சி, ஜூட் ஜெனிஸ்ரன் 7ஏ பி சி , ஹ. நிலக்சன் 6ஏ 2பி சி, மௌ. விதுர்ஜியன் 6ஏ 2பி சி , சு. விபுசன் 6ஏ பி 2சி , கு. துஷான் 5ஏ 3பி சி, ர. டஜுசன் 5ஏ 2சி 2எஸ்

## சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி

ஸ்ரீ.மிதுசா 8ஏ பி, வி.யனோசிகா 8ஏ சி, த.ராகவி 8ஏ சி, ம.அபிசாயினி 7ஏ பி சி, ச.மோனிக்கா 5ஏ 4சி, ச.யக்சலன் 5ஏ 2பி 2சி , க.துஸ்மிலா 5ஏ பி 3சி, ந.கிருசாளினி 5ஏ பி 2சி எஸ், ச.தேனுசன் 5ஏ பி சி 2எஸ், த.சாருண்ஜா 5ஏ 2பி 2எஸ் , உ.திசாரா 4ஏ 3பி 2சி, வி.பிரகாஷ் 4ஏ 2பி 2சி எஸ், ஜெ.பிரதாஸ் 4ஏ 2பி 2சி எஸ், த.டிதர்சிகா 4ஏ 2பி சி 2எஸ், சோ.தர்மினி 4ஏ 2பி 3எஸ், ர.அஜிதா 4ஏ 2பி 3சி

## மிருசுவில் அ.த.க.பாடசாலை

கஜானி 8ஏ எஸ், துசாந்தி 6ஏ 2பி சி, கௌரிபாலன் 4ஏ 2பி சி 2எஸ், கஜேந்தினி 4ஏ 2பி 2சி, மஜீனா 3ஏ 2பி 3சி, மௌலினி 2ஏ 3பி 3சி எஸ், நக்கீரன் 2ஏ பி 3சி 2எஸ், கோபிகா ஏ 3பி 2சி 2எஸ், அபிராஜ் ஏ பி 5சி எஸ், யாழினி 3பி 2சி 3எஸ், மீனா 2பி 5சி எஸ், கம்சா 2பி சி 5எஸ்

## மந்துவில் பாரதி வித்தியாலயம்

எஸ். ஜென்சிகா 7ஏ பி எஸ், ஜே.கனிஸ்கா 2ஏ 3பி 3சி எஸ், எம்.அபிசாஜினி ஏ பி 4சி 3எஸ், கே.கேனுசா பி 4சி 3 எஸ், எஸ்.தர்சன் 4சி 3 எஸ், ஆர்.கம்சிகா 4சி 2எஸ், எஸ். சதுர்சன் 3சி 4எஸ்.

## தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி

சிவகரன் அபிசாய்ராம் 9ஏ, கிறிஸ்ரன் பிரசாத் றியாஜ்மன் 9ஏ, கௌரிகாந்தன் மதுளன் 9ஏ, கிருபாகரன் ஜதுசன் 9ஏ, தர்மகுலராஜா தொலீசன் 9ஏ, சிவராஜா சிவர்தன் 9ஏ, சந்திரகுமரன் சிறிராம்ஜி 9ஏ, கணேசநந்தன் கனிமொழி 9ஏ, அமலராஜா அமலமௌலீஸ் 8ஏ பி, தாசன்பாபு தசங்கன் 8ஏ பி, சண்முகராஜா சாம்புஜன் 8ஏ பி,அருண்தவநாதன் அக்சஜன் 8ஏ பி, பரலோகராசா மரிக்ஸ்சலா 8ஏ பி, புலேந்திரன் ராகவி 8ஏ பி, நந்தகுமாரன் தனுலவன் 8ஏ பி, குலேந்திரன் றம்சிகன் 8ஏ சி, சண்முகலிங்கம் ஜனுயா 8ஏ சி, சிறிஸ்கந்தராசா மதியரசன் 7ஏ 2பி, ஆனந்தராசா தமிழினியன் 7ஏ 2பி, இளங்குமரன் தரணிகா 7ஏ 2பி, சிவகணவேல் கேதாரன் 7ஏ பி சி, கமலக்கண்ணன் நிகாரா 7ஏ பி சி, கஜந்திரன் றித்திகா 7ஏ பி சி, தர்மசீலன்அனுராம் 6ஏ 3பி, ரகுநாதன் தீபிகா 6ஏ 3பி, சசிகாந்தன் கிஷான் 6ஏ 2பி சி, சுகீதன் தசரகன் 6ஏ 2பி சி, நந்தகுமார் டனுசா 6ஏ 2பி சி, மயூரன் விஜேஸ் 6ஏ 2பி சி, சூரியகுமார் சூரியபிரியா 6ஏ 2பி சி, உதயகுமார் சகீனா 6ஏ 2பி சி, விஸ்வலிங்கம் லவிசா 6ஏ 2பி சி, ரஞ்சிதமனோகரன் விவுஜன் 6ஏ பி 2சி, நகுலேஸ்வரன் லிம்சியா 6ஏ பி 2சி, விஜயகுமார் தட்சாயினி 6ஏ பி 2சி, வெற்றிவேல் கஜதீபன் 6ஏ பி 2சி, சிவனேஸ்வரன் மதுாஸ் 6ஏ பி 2சி, கிருபாகரன் கௌதமன் 6ஏ பி 2சி, குகேந்திரன் ரெஸ்மிகா 6ஏ 2பி எஸ், யோகமித்திரன் விபூசனா 6ஏ 3சி, ஜெயசூரியன் தனிகா 6ஏ 2சி எஸ், மயூரன் மதுவந்தி 5ஏ 4பி, பாலேஸ்கரன் அபிசனன் 5ஏ 4பி, ஐங்கரன் மிஷாயினி 5ஏ 4பி, குகன் பாரதி 5ஏ 3பி சி, தவநாதன் கேநாத் 5ஏ 3பி சி, முருகானந்தன் ஜனந்தினி 5ஏ 3பி சி, குருபரன் தபீனா 5ஏ 3பி சி,வரதராசா கிஸ்ணபிரசாத் 5ஏ 2பி 2சி, பத்மநாதன் பெரேசில் 5ஏ பி 2சி எஸ், கேதீஸ்வரன் லக்சிகா 5ஏ 2பி சி

## சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி

பி.தனுசன் 7ஏ 2பி, ப.அனித் 6ஏ சி எஸ், கு.சஸ்மிரா 4ஏ 2பி 2சி எஸ்,வி.சாத்ராக் 3ஏ 2பி 4சி, ந.றக்சியா 3ஏ 2பி 3சி எஸ்,ற.சியானா 3ஏ 4பி சி எஸ், இ.ரனோஜன் 3ஏ 3பி 2சி,ஜெ.சாளினி 2 ஏ6பி எஸ், தெ.தனுசிகன் 2ஏ 4பி 2எஸ்,நா.மயூரன் 2ஏ 3பி 2சி, ஜெ.துசீன் 2ஏ 2சி 5எஸ், ஜெ.தனுசிகன் ஏ 3பி 4சி 2எஸ், ம.பதுமிகா ஏ பி 4சி 2 எஸ், கி.பிளஸ்யா ஏ 4சி 2எஸ், த.குணாளன் 4பி சி 4எஸ்,இ.திகழ்நிலா 3பி 4சி எஸ், கி.பிரியதர்சினி 3பி 3சி எஸ், ம.தனுஸ்ராஜ் 3பி 2சி எஸ், இ.சிவரூபன் 2பி 4சி எஸ், ப.கஜந்தன் பி 5சி 2எஸ், ந.கரிசன் பி 3சி 4 எஸ், ச.பிரதீபன் 6சி 2எஸ், தெ.அன்புக்குமரன் 6சி 2 எஸ், ச.சந்தியா 4சி 4எஸ், வி.அபிசாத் 4சி 2எஸ், தி.அபிசாளன் 2சி 3எஸ்

## வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி

யாழ்ப்பாணம், ஒக்.3
சு.பிரவீன் 9ஏ, ஜெ.நேருசன் 9ஏ , கு.சுவேத்தா 9ஏ , கை.பிரியசகி 9ஏ , றொ.தர்சினி 9ஏ, சே.யதுர்சனா 9ஏ, வி.துஷ்யந்தி 9ஏ, ஜெ.ஜென்ஷா 9 ஏ, க.தேவியனா 7ஏ 2பி, பி.அபிஷாலினி 7ஏ 2பி

## மிருசுவில் அ.த.க.பாடசாலை

யாழ்ப்பாணம், ஒக்.3
ர். கஜானி 8ஏ எஸ், துசாந்தி 6ஏ 2பி சி, கௌரிபாலன் 4ஏ 2பி சி 2எஸ், கஜேந்தினி ஏ 2பி 2சி, மஜீனா 3ஏ 2பி 3சி, மௌலினி 2ஏ 3பி 3சி எஸ், நக்கீரன் 2ஏ பி 3சி 2எஸ், கோபிகா ஏ 3பி 2சி 2எஸ், அபிராஜ் ஏ பி 5சி எஸ், யாழினி 3பி 2சி 3எஸ், மீனா 2பி 5சி எஸ், கம்சா 2பி சி 5எஸ்.

## அச்சுவேலி மத்திய கல்லூரி

தவயோகராசா பிரியதரன் 9ஏ, ராஜ்குமார் பவன்ராஜ் 8ஏ பி, நந்தகுமார் ரிசாந்தன் 7ஏபிசி, கந்தசாமி தனுசாந் 7ஏபிஎஸ், பாலசிங்கம் கமலராஜ் 6ஏ 2பிசி, தவரத்தினம் கிரிதரன் 5ஏ3பிசி, குகானந்தன் மதுசாந் 4ஏ4பிசி, துர்மலிங்கம் ஜெனனிகா 4ஏ3சிஸ், இரட்ணம் தருணிதன் 3ஏ2பி 4சி, ரஞ்சகுமார் திகளினியன் 2ஏ3பி3சிஎஸ், அருந்தவநாதன் கிருசயன் 2ஏ4பி 2சிஎஸ், துயாளன் கசோன் 2ஏ3பி2சி2எஸ், சுரேஸ்குமார் தாரகன் 2ஏபி5சிஎஸ், ராசலிங்கம் டிலக்சியா 2ஏ4பி3சி, சுரேஸ்குமார் தாருசாந் ஏ2பி4சிஎஸ், ஆனந்தராசா சதுர்சன் ஏ2பி3சிஎஸ், பாவளராஜ் அனோஜன் ஏ3பி4சிஎஸ், சசிகுமார் சானுஜா ஏ2பி3சி 3எஸ், அமயராசா துவாரகன் ஏ5பி3சி, பிரசாத் தேனுஜன் ஏ3பிசி4எஸ், கதிஸ் கஜனா ஏபி3சி2எஸ்

## மானிப்பாய் மகளிர் கல்லூரி

ஆர்.நிவேதிகா 9 ஏ, பி.இலக்கியா 9 ஏ, எஸ்.தனுசியா 9 ஏ , ரி.தன்ஷியா 9 ஏ, ஈ.லக்ஸிகா 8ஏ பி , ரி.நேசரம்யா 8ஏ பி ,டி.தருண்ஜா 8ஏ பி, எஸ்.துர்க்கா 8ஏ பி , எஸ்.கஜனிகா 8ஏ பி, பி.சஹானா 8ஏ பி,எஸ்.பவதாரணி 8ஏ பி, பி.ஜஸ்மி 8ஏ பி, ரி.தாட்சாயினி 8ஏ சி , யு.சௌமியா 8ஏ சி, என்.லவனிதா 8ஏ சி, எஸ்.சுவிந்தா 8ஏ சி, பி.ஆத்மிகா 7ஏ 2பி, பி.தமரா 7ஏ 2பி, சி.அக்சிகா 7ஏ 2பி, ஆர்.சைந்தவி 7ஏ 2பி, ரி.சாதனா 7ஏ 2பி, எஸ்.சாதனா 7ஏ பி சி, கே.கஜேந்தினி 7ஏ பி சி, ஆர்.சபிதா 7ஏ பி சி, பி.சகானா 7ஏ சி, எஸ்.ஸ்ரீஜனனி 6ஏ 2பி சி, ஐ.லதுஷியா 6ஏ 2பி சி, பி.அபிராமி 6ஏ 2பி எஸ் ,ஆர்.கிஷானா 5ஏ பி 3சி , ஆர்.பவித்திரா 5ஏ பி 3சி, எஸ்.சுலக்சனா 5ஏ 3பி சி, ஆர்.ஜஷலி 5ஏ 3பி சி ஆர்.கிஷானி 5ஏ 2பி 2சி.

## கச்சாய் ம.வி.

நவீனன் மீதுஷா 9 ஏ,சிவகுமார் ஆர்த்தகி 8ஏசி, பிரபாகரன் காண்டீபன் 6ஏபி2சி,சுரேஷ்தீபன் கஜானா 6ஏபிசிஎஸ், நந்தகுமார் மகிமா 6ஏ 2சிஎஸ்,சிவகுமார் அபினா 5ஏபி2சிஎஸ், சசிகுமார் துவராகன் 4ஏபி3எஸ்சி, யசோகரன் சுவிதா 3ஏ3பி2சிஎஸ், செல்வரத்தினம் ரனுசா 3ஏ3பிசிஎஸ், லோகேஸ்வரன் கிதுர்சன் 2ஏ2பி4சிஎஸ், செல்வராசா கர்சன் ஏ2பி 4சி2எஸ், மகேந்திரன் டிலானி ஏ2பி2சிஎஸ், குணராசா விதுஷா ஏபி2சி3எஸ், (45-25, 159-27-63)

## ஐயன்கன்குளம் மாணவி சாதனை

முல்லைத்தீவு, ஒக்.3
துணுக்காய் கல்வி வலயத்துக்குட்பட்ட மிகவும் பின்தங்கிய கிராம பாடசாலையான ஐயன் கன் குளம் மாகாவித்தியாலயத்தின் வரலாற்றில் முதன்முறையாக இ. நிலாயினி என்ற மாணவி 9ஏ சித்திகளைப் பெற்று பாடசாலைக்கும் கிராமத்துக்கும் பெருமை சேர்த்துள்ளார். (ச-25, 27)



## வவுனியா ம.ம. வி. மாணவன் சாதனை

வவுனியா, ஒக்.3
வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலய மாணவன் சாதாரண தரப் பரீட்சையில் 8ஏ, பி சித்திகளைப் பெற்று சாதனை படைத்துள்ளார். கார்த்திகேயன் ஷயனுஜன் என்ற மாணவனே இவ்வாறு சாதனை படைத்துள்ளார். கடந்த 2023 இல் பத்தாம் தரத்தில் கல்வி பயின்று வந்திருந்த நிலையில் 2023-2024ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சையில் [illegible] பரீட்சையை எழுதியிருந்தார். (45-18)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31 ஆம் நாள் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 03.09.2024 அன்று சிவபதமெய்திய
எங்கள் அன்புக் குலதெய்வம்

**அமரர் கனகையா மாணிக்கவாசகர்**

(ஓய்வுபெற்ற மேற்பார்வையாளர்,
இல்மனைற் தொழிற்சாலை, புல்மோட்டை)

அவர்களின் சிவபதப்பேறு குறித்த அந்தியேட்டிக் கிரியை நிகழ்வு 01.10.2024 செவ்வாய்க்கிழமை பொக்கணை புனித தீர்த்தக்கரையில் இடம்பெற்று வீட்டுக்கிருத்தியக் கிரியை இன்று (03.10.2024) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறவிருப்பதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வற்றாப்பளை, முள்ளியவளை,
முல்லைத்தீவு

குடும்பத்தினர்



### கேள்வி அறிவித்தல்

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கல்லூரி

பல்கலைக்கழகக் கல்லூரியில் உள்ள உணவகத்தை நடாத்துவதற்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கல்லூரி உதவி நிதியாளர் பணிமனையில் 18.10.2024 ஆம் திகதி மு.ப 10.00 மணி வரை பொறியிடப்பட்ட கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

மீளளிக்கப்படும் கேள்விவைப்புப் பணமாக ரூபா 2,000.00 உம் மீளளிக்கப் படாத கட்டணமாக ரூபா 500.00 உம் தனித்தனியாக மக்கள் வங்கியிலுள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கல்லூரி கணக்கு இலக்கம் 162100100045947 இற்கு செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டினைச் சமர்ப்பித்து கேள்விப் படிவங்களை இப் பல்கலைக்கழகக் கல்லூரி உதவி நிதியாளர் பணிமனையில் பெற்றுக்கொள்ளலாம். இது தொடர்பான மேலதிக விபரங்களை அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

உதவி நிதியாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கல்லூரி.
0212217794

(CR43325) J-1



## UNIVERSITY OF JAFFNA, SRILANKA

**WALK-IN-INTERVIEW**
**Library of Tamilology, University of Jaffna**
**(Operated the Kandiah Karthigaesan Trust Fund)**

A walk in interview for the post of PROJECT ASSISTANT on daily paid basis will be held on 08/10/2024 (Tuesday) at 9.00 am at the Board Room of this University.

**Qualifications:**

I. Should have passed the G.C. E. (O/L) Examination in six subjects (not more than two sittings) with credit passes including Tamil Language, Mathematics and English Language.

And

II. Should have passed the G.C. E. (A/L) Examination with three passes.

And

III. Should have obtained a certificate of proficiency not below the NVQ level 4 issued by a Technical/Vocational Training Institute accepted by the Tertiary and Vocational Education Commission or recognized Institution in the field of Information and Communication Technology/ Information Communication and Multimedia Technology/ Data base Management System/ Graphic Design.

- Preference will be given to those who have work experience in ICT/ Da tabase Management System.

**Key Tasks include :**

- Assisting the shelving and maintaining of library collections, procurement activities by maintaining records.
- Assisting the relevant officers in the management of financial activities. (Maintaining financial records, filing system, utilization of operation fund released)
- Assisting the overall implementation of project activities assigned by the Project Coordinator and the Librarian.

Age: Not more than 35 years on the closing date of application.
Salary: Rs 1701.00 per day will be paid.

Candidates are required to appear with relevant certificates, NIC with duly filled application in the prescribed format available in the University website – www.jfn.ac.lk

REGISTRAR
University of Jaffna
01/10/2024


# கண்காட்சி

யாழ்ப்பாணம், ஒக்.3

கலைவட்டம் 'புதிய ஊடகக் கலையின் றினோசன் சுஸ்மிதன் கண்காட்சி' எனும் தலைப்பில் கண்காட்சி நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை தொடக்கம் எதிர்வரும் 6ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை யாழ்.பல்கலைக்கழக நுண்கலைத்துறை கலைக்கூடத்தில் இடம்பெறவுள்ளது.

கண்காட்சியில் இலவசமாக பங்குபற்றமுடியும் எனவும், கலை ஆர்வலர்கள், பொதுமக்கள், பாடசாலை மாணவர்கள் ஆகியோர் கலந்து கொள்ளலாம் என நுண்கலைத்துறை தலைவர் அகிலன் தெரிவித்தார். (ரி)

# ஐந்து சிறுமிகள் துஷ்பிரயோகம்

## வயோதிபர் கைது

கொழும்பு, ஒக்.3

ஐந்து சிறுமிகளை பாலியல் துஷ்பிரயோகம் செய்ததாகக் கூறப்படும் வயோதிபர் ஒருவர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளதாகக் கண்டி பொலிஸ் சிறுவர் மற்றும் பெண்கள் பாதுகாப்புப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

64 வயதுடைய வயோதிபர் ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

பாதிக்கப்பட்ட ஐந்து சிறுமிகளும் பரிசோதனைக்காகக் கண்டி தேசிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மேலதிக விசாரணைகளை கண்டி பொலிஸ் சிறுவர் மற்றும் பெண்கள் பாதுகாப்புப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர். (ச)


## அபயம்

உடல் நலம் மற்றும் கல்விக்கான அறக்கட்டளை

## வேலை வாய்ப்பு

### உளவளத்துணை ஆலோசகர்

அபயம் அறக்கட்டளை சேவைகளில் ஒன்றான மனநெருக்கீடுகளில் இருப்பவர்களுக்கான 24 மணி நேர இலவச தொலைபேசி உளவளச் சேவையை ஆற்றி வருகின்றது. இச்சேவையை மேம்படுத்துவதற்கு மேலும் உளவளத்துணை ஆலோசகர் ஒருவர் தேவை.

**Qualification**

- Degree or Diploma in Related Filed
- தமிழ் மற்றும் ஆங்கில மொழியில் சரளமாக உரையாடக்கூடிய தன்மை.

ஆர்வமுடையோர் தங்களது சுய விபரக் கோவையினை 08.10.2024 க்கு முன்னர் கிடைக்கக்கூடிய வகையில் Dr.T Sathiyamoorthy , அபயம் இணைப்பாளர்,போதனா வைத்தியசாலை,யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும் .சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.



## பாராட்டி வாழ்த்துகின்றோம்

### வட மாகாண ஆளுநர்
### உயர்திரு நா. வேதநாயகன் அவர்களை பாராட்டி வாழ்த்துகின்றோம்




அளவையூர் ஆற்றல் மிகு தமிழ் ஆசானும் முதுபெரும் கூட்டுறவாளருமாகிய அமரர் பண்டிதர் நாகலிங்கம் ஐயா அவர்களின் சிரேஸ்ட புதல்வனான உயர்திரு நா.வேதநாயகன் அவர்கள் கல்வியில் சிறந்து பட்டங்கள் பெற்று அரசின் பணிகள் பலவற்றை அணி செய்து ஓய்வு பெற்றவர். அவரது சேவைக்காலத்தில் கூட்டுறவுத்துறைக்கு ஆற்றிய அரும் பெரும் பணிகளை என்றுமே கூட்டுறவாளர்கள் நன்றியுடன் மனம் கொள்கிறார்கள்.

அவரது உண்மையான, நேர்மையான அரச பணிகளின் பேறாக கிடைக்கப்பெற்ற எமது மாகாணத்தின் உயப் பதவியான வடமாகாண ஆளுநர் பதவி அவர்களுக்கு மிகப் பொருத்தமானதே. இப்பதவிக்காலத்தில் அவர்கள் எமது பிரதேச அபிவிருத்திக்கான திட்டங்களுக்கு ஒத்துழைப்புக்களை வழங்கி அபிவிருத்தியின் நாயகனாக திகழ்வார் என்பதில் ஐயமில்லை. மேலும் தனது இப்பதவிக் காலத்தில் கிராமிய பொருளாதார அபிவிருத்திக்கு பெரிதும் பொருத்தமான எமது கூட்டுறவுத்துறையின் வளர்ச்சிக்கு உதவுவார் என்பதில் கூட்டுறவாளர்கள் மிகுந்த நம்பிக்கையுடன் உள்ளார்கள். வடமாகாண ஆளுநர் உயர் திரு.நா. வேதநாயகன் அவர்கள் தனது பதவிக்காலத்தில் சிறந்த பணிகளை ஆற்றுவதற்கு இறை சக்தியை பிரார்த்தித்து அமைகின்றோம்.

யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை

(CR43330) J-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## வைத்திலிங்கம் தில்லைநடராஜன் (தில்லை)

(ஓய்வுபெற்ற நில அளவையாளர், Em So Limited, Geographic information systems (GIS) Consultant )



மலர்வு 21.03.1945 உதிர்வு 29.09.2024

சாவகச்சேரியை பிறப்பிடமாகவும், கொழும்பு , சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் தில்லைநடராஜன் (ஓய்வுபெற்ற நில அளவையாளர், Geographic information systems (GIS) Consultant) அவர்கள் கடந்த (29-09-2024) ஞாயிற்றுக்கிழமை சாவகச்சேரியில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - கனகாம்பிகை தம்பதியரின் சிரேஸ்ட புத்திரனும், காலஞ்சென்றவர்களான அருணாசலம் - சிவஞானவதி தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற திருமதி யோகராணி தில்லைநடராஜன் (புஸ்பம்) அவர்களின் அன்புக் கணவரும், சுபோதினி (லண்டன்), பாமினி (லண்டன்), அஜந்தன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிறிஸ்கந்தராஜா (லண்டன்), மனோகரன் (லண்டன்), ஜெயராணி (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், வசந்தநாயகி (சாவகச்சேரி), பத்மசேனன் (கனடா), காலஞ்சென்ற மனோகரி (சாவகச்சேரி) ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற ராஜசங்கரி, தங்கராணி (கனடா), காலம்சென்ற மகாதேவன், காலஞ்சென்ற ஆனந்தநடேசன் மற்றும் - சுகுனாம்பிகை (கனடா), விமலாராணி - சண்முகதேவன் (நீர்வேலி), காலம்சென்ற இந்திராணி - சுகுனாநந்தன் (கனடா), ஜெயராணி - உமாபதிசிவம் (ஜேர்மனி), அருமைநாதன் - கிருபானந்தி (கனடா), இராசேந்திரம் - சரோஜினிதேவி (ஜேர்மனி), செல்வராணி - பாலசிங்கம் (நீர்வேலி), பத்மராணி - குகராஜன் (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும், செந்தில்குமார், ஜானகி, முரளினி - முரளிதரன், நடனதேவன் - தீபா, துவாரகன் - டயானா ஆகியோரின் மாமனாரும், உஷா, கோபகன் ஆகியோரின் பெரியப்பாவும், சாருஜன், கிருஜன், தீபனா, தீபிகா, சாரங்கன், சிறிரங்கன், அபிஷா, கோகிலவதனன், கோகில்ராஜ், விதுஷா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.10.2024) வியாழக்கிழமை இலக்கம் 3, கற்குழி ஒழுங்கை, தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. இல்லத்தில் நடைபெற்று, முற்பகல் 10 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்என்பதை பணிவன்போடு அறியத்தருகின்றோம். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு:
சுபோதினி - மகள் - +44 7984 438266
பாமினி - மகள் - +44 7975 853181
அஜந்தன் - மகன் - +1 6477 796799

தகவல்:
குடும்பத்தினர்

(CR/43323) J-1

# மரண அறிவித்தல்

## இராஜசங்கரி வசந்தநாயகி (வசந்தி அக்கா)



சாவகச்சேரி, கற்குழி 1ம் ஒழுங்கை, தபாற் கந்தோர் வீதியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இராஜசங்கரி வசந்தநாயகி அவர்கள் நேற்று (02.10.2024) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - கனகாம்பிகை தம்பதியரின் சிரேஷ்ட மகளும், காலஞ்சென்றவர்களான வீரசிங்கம் - இரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற வீரசிங்கம் இராஜசங்கரி (ஓய்வுபெற்ற சுங்கத் திணைக்கள உத்தியோகத்தர், சட்டத்தரணி) அவர்களின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்ற தில்லைநடராஜன் (ஓய்வுபெற்ற நில அளவையாளர், GIS Consultant), பத்மசேனன் (கனடா), காலஞ்சென்ற மனோகரிதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற யோகராணி மற்றும் தங்கராணி, காலஞ்சென்றவர்களான மகாதேவன், தர்மசங்கரி, கணேசசங்கரி மற்றும் ஆனந்தசங்கரி, காலஞ்சென்றவர்களான சகாதேவசங்கரி, பரதசங்கரி மற்றும் மதியாபரணம், காலஞ்சென்றவர்களான ஞானசங்கரி, மங்கையற்கரசி, துருவசங்கரி, மற்றும் லோகநாயகி, காலஞ்சென்ற திருநெல்நாயகி ஆகியோரின் பாசமிகு மைத்துனியும், சுபோதினி-சிறிஸ்கந்தராஜா (லண்டன்), பாமினி-மனோகரன் (லண்டன்), அஜந்தன்-ஜெயராணி (கனடா), உஷா (கனடா), கோபன்-சமந்தா (கனடா), ஆகியோரின் பாசமிகு மாமியாரும், முரளினி-முரளீதரன் (லண்டன்), நடனதேவன்-பிரதீபா, துவாரகன் - டயானா ஆகியோரின் பாசமிகு பெரியதாயாரும், சாருஜன், கிருஜன், தீபனா, தீபிகா, சாரங்கன், சிறீரங்கன், அபிஷா, மாயா, தஸ்மி, தஸ்வினி, தீப்தி, தேயஷ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.10.2024) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் கற்குழி 1ம் ஒழுங்கை, தபாற்கந்தோர் வீதி சாவகச்சேரியில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு:
நடனதேவன் - பெறாமகன் - 0094 77 254 3989
துவாரகன் - பெறாமகன் - 0094 76 982 4152

தகவல்:
குடும்பத்தினர்

(CR/43335) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரம்பமானது கீரிமலை - கொழும்பு பஸ் சேவை



யாழ்ப்பாணம், ஒக்.3

பருத்தித்துறை பேருந்து சாலையினரால் கீரிமலையிலிருந்து கொழும்புக்கான பேருந்து சேவை நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பருத்தித்துறைசாலை முகாமையாளர் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் வட பிராந்திய இலங்கை போக்குவரத்துச்சபை அதிகாரிகள் உட்படப் பலரும் கலந்துகொண்டனர். மேற்படி பேருந்து கீரிமலையிலிருந்து புறப்பட்டு காங்கேசன்துறை, தொண்டைமானாறு, வல்வெட்டித்துறை ஊடாக பருத்தித்துறையை இரவு 9 மணிக்கு வந்தடைந்து மீண்டும் அங்கிருந்து புறப்பட்டு வவுனியா அநுராதபுரம், புத்தளம் வழியாக கொழும்பை சென்றடையவுள்ளது.

(ச-25,27)

# நவராத்திரி விழா

'வடலி அம்மன்' என அழைக்கப்படும் சுன்னாகம் மயிலணி ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்தின் நவராத்திரி விழா இன்று வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து ஒன்பது தினங்கள் தினமும் மாலை 4 மணிக்கு அபிஷேகம் ஆரம்பமாகி துர்க்கா, லட்சுமி, சரஸ்வதி ஆகிய முத்தேவியருக்கான ஹோமம், சிறப்பு வழிபாடுகள் என்பன இடம்பெறும். பத்தாம் நாளான எதிர்வரும் 12 ஆம் திகதி சனிக்கிழமை விஜயதசமி உற்சவம் நடைபெறும். அன்றையதினம் காலை 6 மணிக்க ஏடு தொடக்கலும் இடம்பெறுமென ஆலயப் பிரதமகுரு சிவஸ்ரீ.நா.சிவசங்கரக் குருக்கள் தெரிவித்தார்.

(ச-25,66)

# மருத்துவர் அர்ச்சுனாவுக்காக கொதித்தவர் விளக்கமறியலில்

மன்னார் நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்த வழக்கு விசாரணை தொடர்பாகவும், நீதிமன்றத்தின் சுயாதீன விசாரணையை விமர்சித்து முகநூலில் பதிவிட்ட இளைஞரொருவரை விளக்கமறியலில் வைக்க மன்னார் நீதிமன்று நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை உத்தரவிட்டுள்ளது.

மன்னார் பகுதியைச் சேர்ந்த குறித்த இளைஞர் மருத்துவர் அர்ச்சுனாவின் வழக்கு விசாரணைகள் குறித்தும், மன்னார் நீதிமன்றம், சட்டத்தரணிகள் மற்றும் பொலிஸாருக்கு எதிராகவும் அவநம்பிக்கையை ஏற்படுத்தும் வகையிலும் முகநூல் பக்கத்தில் பதிவிட்டிருந்தார் என மன்னார் சட்டத்தரணிகள் ஊடாக மன்னார் நீதிமன்றத்தில் குறித்த இளைஞருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

குறித்த இளைஞர் நீதிமன்றில் முன்னிலை ஆகாத நிலையில் பிடியாணை பிறப்பிக்கப்பட்டதையடுத்து பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார்.

இதன்போது குறித்த இளைஞர் தனது குற்றத்தை ஒப்புக்கொண்ட நிலையில் எதிர்வரும் 15ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார்.

(ச-56)

# நவராத்திரி விழா

யாழ்., ஒக்.3

ஈவினை மதுரையம்பதி மீனாட்சி அம்மன் ஆலய நவராத்திரி விழா இன்று வியாழக்கிழமை மாலை 5 மணிக்கு சிறப்புப் பூசை வழிபாடுகளுடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து ஒன்பது தினங்கள் துர்க்கை, லட்சுமி, சரஸ்வதி ஆகிய முத்தேவி யருக்கான பூசை வழிபாடுகள், ஸ்ரீசக்கர யந்திரப் பூசை என்பன இடம்பெறும். எதிர்வரும் 12 ஆம் திகதி சனிக்கிழமை மு.ப. 11 மணிக்கு மானம்பூ உற்சவம் நடைபெறுமென ஆலயப் பிரதமகுரு து.கு.ஜெகதீஸ்வரக் குருக்கள் தெரிவித்தார்.

(ச-25,66)

## மணப்பெண் தேவை

1. கோண்டாவில்-கல்வியன்காடு, இந்து கௌரவகுலம் (v) 1990, ரேவதி, Phd in Engineering, Australia மாப்பிள்ளைக்கு பெண் தேவை. 34935
2. தெல்லிப்பளை, இந்து கௌரவகுலம் (V), 1988, உத்தரம், Bsc Engineering, USA மாப்பிள்ளைக்கு பெண் தேவை 34337
3. காரைநகர் இந்து கௌரவகுலம் (V) 1989 சித்திரை Graduate, UK மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
4. பருத்தித்துறை இந்து கௌரவ குலம் (v), 1990 அவிட்டம் Bsc (Hons), கனடா மாப்பிள்ளைக்கு பெண் தேவை
5. பருத்தித்துறை இந்து கௌரவகுலம் 1987 உத்தரம், BSc, ACMA, CGMA Senior Financial Analyst Canada மாப்பிள்ளைக்கு பெண்தேவை
6. கரபன்-Jaffna Town இந்து கௌரவகுலம் (v) 1988 ரோகிணி BSc Engineer கனடா மாப்பிள்ளைக்கு பெண் தேவை 28033
7. உரும்பிராய்-இணுவில் இந்து கௌரவகுலம் (v) 1991 பூரம் Network Engineer, Australia மாப்பிள்ளைக்கு பெண் தேவை 29309
8. கந்தர்மடம் இந்து கௌரவகுலம் (v), 1989 உத்திராடம், MSc Canada மாப்பிள்ளைக்கு பெண்தேவை
9. கரவெட்டி இந்து கௌரவகுலம் (v), 1986 திருவோணம் BA (Hons), CIMA Fully Qualified, UK மாப்பிள்ளைக்கு பெண் தேவை

S.Sharma J.P. 077 539 3728
www.thaalee.com whatsap: 077 803 8193

## அந்தியேட்டி வீட்டுக்கிருந்திய அழைப்பிதழ்



கடந்த 07.09.2024 சனிக்கிழமை சிவபதமடைந்த
எமது குடும்பத்தின் ஒளிவிளக்கு

### அமரர் திருமதி உதயகுமாரி (அமுதா) தயாரூபன்

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் நாளை (04.10.2024) வெள்ளிக்கிமை கீரிமலையில் நடைபெற்று புனிததீர்த்தக் கரையில் அஸ்த்தி கரைக்கப்படுவதுடன் 06.10.2024 ஞாயிற்றுக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும் சபிண்கரணக்கரியைகள் மற்றும் ஆத்மாசாந்தி பிரார்த்தனைகளுடன் மதியபோசன நிகழ்வும் இடம்பெறுஆறுதல் கரம் கொடுத்து அரவணைத்தோர்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

எம் இதய தெய்வம் எமைவிட்டுப்பிரிந்த பின்பு எமக்கு ஆறுதல் அளித்த, பதாகைகள் துண்டுப்பிரசுரங்கள் மூலமும் அரவணைத்து அனைத்துவழிகளிலும் தோள் கொடுத்து உதவிய அனைத்து உள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

292, பிராதான வீதி,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்

த. அபிலாஸ், த. அபினாஸ்
மற்றும் குடும்பத்தினர்.
077 399 9430

(CS 1516) V-1

## மரண அறிவித்தல்

தோற்றம்
06 . 10 . 1938



மறைவு
02 . 10 . 2024

### இராசையா தங்கரத்தினம்

சிறுப்பிட்டி வடக்கு, நீர்வேலியை பிறப்பிடமாகவும் சிவிச் சென்ரர் வட்டக்கச்சியை வதிவிடமாகவும் கொண்ட இராசையா தங்கரத்தினம் அவர்கள் 02.10.2024 புதன்கிழமை அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னுத்துரை தங்கம் ஆகியோரின் அன்பு மகளும், காலஞ்சென்ற இராசையாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான இராசம்மா, யோகம்மா, பாலசிங்கம் மற்றும் குலசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், பரஞ்சோதி (கனடா), செல்வராணி, புஸ்பராணி (இந்தியா), காலஞ்சென்ற இராசரத்தினம், உதயகுமார் (பிரான்ஸ்), சிவராணி, துரைராணி (இந்தியா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், நகுலேஸ்வரி (கனடா), பரமநாதன், தேவராசா (இந்தியா), சுபாசினி (பிரான்ஸ்), கோபாலசிங்கம், நித்தியானந்தம் (இந்தியா) ஆகியோரின் அன்பு மாமியாரும், வாசுகி-குகனேசன் (சுவீடன்), சிறிதரன்-சாந்தறூபி, ஜெயாதேவி-விக்கிணராஜா, காலஞ்சென்ற சிறீரூபன், நிசாந்தன் (கனடா), துவாரகன்-கார்த்திகா (கனடா), றுக்சன்-டக்சாயினி (கனடா), பிரதீபா-மதிவதனன் (கனடா), லோபிதா, கிருசாளினி-சதீபன் (ஜேர்மனி), அபிசன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் பேர்த்தியும், றொசான் (சுவீடன்), றொபின் (சுவீடன்), விந்தியா, கிருசாந்தி, அபிநயா, மதுரூபன், பிரனிதா, மிதுஸ் (கனடா), அஸ்வீன் (கனடா) ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் இன்று (03.10.2024) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக் கரியைக்காக பன்னாங்கண்ட இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

076 619 6631
077 962 2717

(CS 1519) V-1

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வேலையாட்கள் தேவை**

மீசாலை, புத்தூர் சந்தியில் இயங்கிவரும்
பிரபல தொழிலகமான
NIMAL ENTERPRISES (PVT) LTD
மின்ஒட்டு **WELDING** வேலைக்கு
அனுபவமுள்ளவர்களும், பழக
விரும்புபவர்களும் தொடர்பு கொள்ளவும்.
(CR/433333) J-1

**077 345 6552**

## பயிற்சிப் பட்டறை

கிளிநொச்சி, ஒக். 3

கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பன்னிரு மாத விளக்கு வேலைத்திட்டத்தின் கீழ் 'சிறுவர்களின் உலகில் நிறங்களான நீல வானம்' எனும் தொனிப்பொருளிலான பட்டக் கண்காட்சியின் ஒரு பகுதியாக பட்டம் கட்டும் பயிற்சிப் பட்டறை பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. வளவாளராக கலைஞானி குமரநாதன் உட்பட அறநெறிப் பாடசாலை மாணவர்கள், சிறுவர் சமூக சிறுவர்கள், கலைஸ்ரீ மன்ற மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர் என பலரும் கலந்து தொண்டனர்.

(ச-25-9)

## மஹோற்சவம்

யாழ்ப்பாணம், ஒக். 3

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ வல்லிபுரநாதர் ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருவிழா இன்று வியாழக்கிழமை மு.ப. 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து பத்துத் தினங்கள் காலை, மாலை உற்சவங்களாக பெருவிழா இடம்பெறும். எதிர்வரும் 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப.10 மணிக்கு தேர்த்திருவிழாவும், மறுநாள் சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும், அன்றையதினம் இரவு 7 மணிக்கு கொடியிறக்க உற்சவமும் நடைபெறுமென ஆலய பரிபாலனசபையினர் தெரிவித்துள்ளனர்.

(ச-25, 66)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம் 02.02.1944 மறைவு 03.09.2024

கடந்த 03.09.2024 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர்

### கணபதிப்பிள்ளை வேலுப்பிள்ளை

(ஓய்வு நிலை மேற்பார்வையாளர் தேசிய உப்புக்கூட்டுத் தாபனம் - ஆனையிறவு)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் கடந்த 01.10.2024 செவ்வாய்க்கிழமை காலை 7.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது. வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (03.10.2024) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தோணிக்கல்,
வவுனியா.

குடும்பத்தினர்
077 926 2510

(CS/56332) J-1

## மரண அறிவித்தல்



தோற்றம் 24 . 12 . 1943 மறைவு 01 . 10 . 2024

### வேலாயுதம் கனகையா

(புங்குடுதீவு சபரிமலை ஐயப்பன் ஆலய தர்மகர்த்தா)

புங்குடுதீவு 8ம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம், புங்குடுதீவு 10ம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட வேலாயுதம் (சின்னத்தம்பி) கனகையா (புங்குடுதீவு சபரிமலை ஐயப்பன் ஆலய தர்மகர்த்தா ) அவர்கள் நேற்று முன்தினம் (01.10.2024) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரவேலு (கறுப்பாத்தை உடையார்) விஸ்வலிங்கம் உடையார் அவர்களின் அன்பு பேரனாரும், காலஞ்சென்றவர்களான வேலாயுதம் - கனகாம்பிகை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான விஸ்வலிங்கம் - கண்மணி தம்பதியரின் மருமகனும், தில்லைமலர் அவர்களின் அன்புக் கணவரும், யாழினி, செந்தூரன் (வல்லன் உப தபாலதிபர்) ஆகியோரின் அன்புத் தந்தையும், கரன் (பிரான்ஸ்) அவர்களின் மாமனும், காலஞ்சென்றவர்களான சிவயோகம், பொன்னுச்சாமி , திலகவதி மற்றும் தேவி, இந்திரா, விஜயா காலஞ்சென்ற விமலா மற்றும் லலிதா காலம்சென்ற சாம்பசிவம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற சுந்தரம், மற்றும் விசஜா காலஞ்சென்றவர்களான மதியாபரணம் சோமசுந்தரம், பாலன், குகதாசன் மற்றும் நாகரெத்தினம், பூங்கோதை, காலஞ்சென்றவர்களான மங்கையற்கரசி, கனகாம்பிகை மற்றும் திருநாவுக்கரசு, தெட்சணாமூர்த்தி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.10.2024) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் கண்ணகி அம்மன் கோவிலடியில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மணற்காடு இந்து மயனத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்லை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்
மனைவி, மக்கள், மருமகன்
076 779 0033

புங்குடுதீவு - 10

(CS/56352) J-1

## மரண அறிவித்தல்



தோற்றம் 17 . 08 . 1940 மறைவு 29 . 09 . 2024

அமரர் அப்புக்குட்டி கந்தசாமி

சுதுமலை தெற்கை பிறப்பிடமாகவும் கதிரிப்பாய் அச்சுவேலியை வசிப்பிடமாகவும் கொண்ட முன்னாள் இலங்கை போக்குவரத்து சபை நடத்துநரும் கோப்பாய் பிரதேச சபை மத்தியஸ்த உறுப்பினரும் அகில இலங்கை சமாதான நீதவானும் சுதுமலை தெற்கு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை, யுவசக்தி சனசமூக நிலையம், கதிரிப்பாய் முரசொலி சனசமூக நிலையம், கதிரிப்பாய் ஸ்ரீகண்ணகை அம்மன் ஆலயம் ஆகியவற்றின் ஸ்தாபகரும், குன்றக்குமரன் மரக்காலை கட்டடத் தொகுதியின் உரிமையாளருமான அப்புக்குட்டி கந்தசாமி அவர்கள் 29.09.2024 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் அப்புக்குட்டி-சிதம்பரம் தம்பதியரின் அன்பு மகனும், சிதம்பரம்-ஆசைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் துரைசிங்கம், நல்லம்மா தங்கச்சியம்மா, வேலாயுதபிள்ளை, முத்தம்மா ஆகியோரின் பாசமிகு சகோதரனும் களஞ்சியத்தின் அன்புக் கணவரும் தெய்வேந்திரத்தின் மைத்துனரும் சத்தியாவதி (சத்தியா-ஜேர்மனி), மனோகரன் (கரன்-சுவிஸ்), குமுதினி (ஜெசி-பிரான்ஸ்), பிரதீபா (தீபா-சுவிஸ்), ஹரிதாஸ் (தாசன்-பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் விமலநாதன் (விமல்-ஜேர்மனி), செல்வகுமார் (செல்வா-பிரான்ஸ்), திவாகரன் (தீபன்- சுவிஸ்), ஜெயகலா (துஷி-சுவிஸ்), தர்சனா (தர்ஷா-பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் கொன்சிகா, தர்சன் (பிரான்ஸ்), பிரீத்தா, விதுஷன் (ஜேர்மனி), வர்சன், சர்யுன், அஸ்வின் (பிரான்ஸ்), தன்சிகா, அத்விக் (சுவிஸ்), கர்ணிகா, நிகாரிகா, தாரிகா (பிரான்ஸ்), துருவ், றுத்ரா (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு பேரனும் விகான், றிகானா (பிரான்ஸ்) ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (03.10.2024) வியாழக்கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கதிரிப்பாய் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

077 352 9440
Lukshan (குட்டி)

(CS 1515) V-1

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பமாகின!

## ரணில் விரைவில் நீதிமன்றக் கூட்டில் அமைச்சர் விஜித ஹேரத் தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 3

உயிர்த்த ஞாயிறு தாக்குதல், மத்தியவங்கி பிணை முறி மோசடி என்பன தொடர்பாக ஆரம்பகட்ட விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக பொதுப்பாதுகாப்பு அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி அநுரகுமார தலைமையிலான முதலாவது அமைச்சரவைக்கூட்டம் முடிவடைந்த பின்னர் அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டிலேயே பொதுப்பாதுகாப்பு அமைச்சர் இந்த விசாரணைகள் தொடர்பான தகவல்களைத் தெரிவித்துள்ளார்.

இந்த வழக்குகள் இரண்டும் முன்னைய ஆட்சியாளர்களின் அழுத்தம் காரணமாக உரிய வகையில் முன்னெடுக்கப்படவில்லை. மத்தியவங்கி பிணைமுறி மோசடியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படவில்லை. ஜனாதிபதி பதவி அதற்குத்தடையாக இருந்தது.

அரசமைப்பில் ஜனாதிபதிக்கு எதிராக நடவடிக்கை எடுக்கமுடியாது என்று சொல்லப்படவில்லை. அத்துடன் அவர் இப்போது ஜனாதிபதி பதவியிலும் இல்லை. நாங்கள் விரைவில் ரணிலை நீதிமன்றத்தில் நிறுத்துவோம். பிணைமுறி மோசடியில் சம்பந்தப்பட்ட இன்னொரு நபர் அர்ஜுன் மகேந்திரன் திருமண நிகழ்வு ஒன்றுக்குச் செல்வதாகக் கூறிச் சென்று சிங்கப்பூரில் அரசியல் தஞ்சம் கோரியுள்ளார். அவரையும் அழைத்து வர ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன - என்றார். (அ-ம)

### முறைமை...

அரசியல் தளத்தையும் கொழும்மையும் மையமாகக் கொண்டிராது அது பரவலாகவேண்டும் என்று நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் மனோ கணேசன் வலியுறுத்தியுள்ளார்.

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் வாழும் தமிழ் மக்களும், மலையகத் தமிழர்களும் ஜனாதிபதி அநுரவிடம் அனுதாபத்தை எதிர்பார்க்கவில்லை. மாறாக நியாயத்தையும் நீடித்த முறைமை மாற்றத்தையுமே எதிர்பார்க்கின்றனர் என்றும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் மனோ கணேசன் சுட்டிக்காட்டியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதியாகப் பொறுப்பேற்றுள்ள நண்பர் அநுரகுமார திஸாநாயக்கவுக்கு எனது மனப்பூர்வமான வாழ்த்துகள். அரசியல் குரோதங்கள், கட்சி வேறுபாடுகளின்றி பொறுப்புள்ள ஐக்கிய மக்கள் கூட்டணியாக, தமிழ் முற்போக்கு கூட்டணியாக நாம் செயற்படுவோம். நீங்கள் உறுதியளித்த உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சூத்திரதாரிகளைக் கண்டறிந்து அவர்களுக்குத் தண்டனை வழங்குவது, ஊழல் ஒழிப்பு, வெளிநாடுகளில் பதுக்கி வைக்கப்பட்டுள்ள நாட்டின் சொத்துகளை மீட்பது, மத்திய வங்கியின் பிணை முறி கொள்ளையரைத் தண்டிப்பது, சிவராம், நடேசன், எக்னலிகொட, லசந்த போன்ற ஊடகவியலாளர்களின் படுகொலைகளுடன் தொடர்புடையோருக்குத் தண்டனை வழங்குவது ஆகிய அனைத்து நடவடிக்கைகளுக்கும் நாங்கள் இரு கரங்களை உயர்த்தி எங்களின் ஆதரவைத் தருவோம்.

ஜனாதிபதி அநுர சகோதரரே, இந்த நாட்டில் 200 வருடங்கள் வாழ்ந்துவிட்ட மலையக பெருந்தோட்ட மக்களுக்கு ஒரு அங்குலம் நிலம் கூட இல்லை என அனுதாபப்பட்டமையை நான் அறிவேன். எமக்கு அனுதாபங்கள் அல்ல நியாயங்களே தேவை. மலையக மக்களுக்கு வீடு கட்டிக்கொள்ளவும், வாழ்வாதார தேவைகளுக்காகவும் காணி வழங்குங்கள். காணி உரிமை வழங்கி அவர்களை இலங்கையின் தேசிய நீரோட்டத்துக்குள் கொண்டு வாருங்கள். உங்கள் 'சிஸ்டம் சேஞ்' என்ற முறைமை மாற்றத்தை பெருந்தோட்டங்களிலும் கொண்டுவாருங்கள்.

அரசியல் கைதிகளை விடுவியுங்கள். இப்போதுதான் யுத்தம் இல்லையே? ஆகவே விடுவிக்கப்படாத அனைத்து தனியார் காணிகளையும் உடன் விடுவியுங்கள். காணாமல்போனோரின் குடும்பங்களுக்கு நியாயம் கொடுங்கள். உடனடியாக அங்கே மாகாண சபைத் தேர்தல்களை நடத்துங்கள். மாகாணசபைத் தேர்தல்களை நடத்தும்படி ரணில் விக்கிரமசிங்கவிடம் கேட்டு கேட்டு நான் அலுத்தே போய்விட்டேன் - என்றார். (அ-ம)

### புடைவையகத்துள்...

மோட்டார்சைக்கிளில் வந்த மூவரைக் கொண்ட குழுவினரே புடைவையகத்தை இவ்வாறு தீக்கிரையாக்கியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தப் புடைவையகத்தை இதற்கு முன்னர் இரண்டு தடவைகள் தீக்கிரையாக்க எத்தனிக்கப்பட்ட போதிலும், அந்த முயற்சிகள் தடுத்து நிறுத்தப்பட்டிருந்தன என்றும் பொலிஸாரிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நெல்லியடிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-100)

### சிறீதரனோடு...

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் குற்றஞ்சாட்டியுள்ளது.

ஐக்கிய மக்கள் கூட்டணியின் தலைவர்கள் ஒன்றிணைந்து கொழும்பில் நேற்று நடத்திய ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடுகையிலேயே முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் நிஷாம் இவ்வாறு குற்றஞ்சாட்டியுள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரனைச் சந்தித்துள்ளார். ஏன் எங்களைச் சந்திக்கவில்லை? ஏன் சுமந்திரனை சந்திக்கவில்லை? அநுரகுமார திஸாநாயக்கவுக்கு சிறீதரன் வாக்களிக்கவில்லை. அரியநேந்திரன் களமிறங்கிய சங்கு சின்னத்துக்கே அவர் வாக்களித்தார். தனக்கு எதிராக வேலைசெய்த சிறீதரனை ஜனாதிபதி அநுர சந்தித்துள்ளார். அப்படியானால் அவர்மூலமாக சில வேலைகள் நடந்துள்ளன என்பதையே இது காட்டுகின்றது.

இங்கு எவரும் சுத்தவாதிகள் கிடையாது. இந்தச் சந்திப்பின் பின்னணியை தமிழ் பேசும் மக்கள் புரிந்துகொள்ள வேண்டும். தமிழ் பேசும் மக்களின் அபிலாஷைகளை இப்படி 'டீல்' போட்டு மடக்கிக் கொள்வதற்கு நாம் இடமளிக்கமாட்டோம். நாடாளுமன்றத்தில் இது தொடர்பில் பேசுவதற்கு பலமான கட்சி அவசியம்' - என்றார். (அ-ம-44)

### விசாரணைக்கு...

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பில் ஏற்கனவே நிறைவேற்றப்பட்ட 51/1தீர்மானத்தை வாக்கெடுப்பின்றி மேலும் ஒரு வருடத்துக்கு நீடிப்பதற்கு அவசியமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ள பின்னணியிலேயே, மனித உரிமை மீறல்கள் தொடர்பான விசாரணைகளுக்கு ஒத்துழைக்க வேண்டும் என்று ஜனாதிபதி அநுரவிடம் மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்தியுள்ளது.

அத்துடன், மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் இலக்கு வைக்கப்படுவது, பாதுகாப்புப் படையினரின் குற்றங்களில் இருந்து அவர்களைப் பாதுகாப்பது, அப்பாவி மக்கள் மீதான வன்முறைகளைத் தொடர்வது என்பன அநுர தலைமையிலான அரசாங்கத்தில் தொடரக்கூடாது என்றும் மனித உரிமைகள் கண்காணிப்பகம் சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கையின் போர்க்குற்றங்களுக்கான நீதிப் பொறிமுறைகள் தொடர்பில், பல உள்நாட்டு, வெளிநாட்டு அமைப்புகள் செய்த சிபார்சுகளை முன்னைய ஆட்சியாளர்கள் நிராகரித்தமைக்கும் மனித உரிமைகள் கண்காணிப்பகம் தனது அதிருப்தியைத் தெரிவித்துள்ளது. (அ-ம-6)

### வடக்கு...

தொகுதிகளில் சஜித் பிரேமதாஸ முதலிடம் பிடித்தார். குறிப்பாக சஜித் மீது நம்பிக்கை வைத்த வடக்கு மக்களுக்கு நன்றிகள்' என கபீர் ஹாசீம் மேலும் தெரிவித்துள்ளார். (அ-ம-44)

### மீனவர்களை...

நான்கு விடயங்களுக்குத் தீர்வு காண வேண்டும் என்று அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

1974ஆம் ஆண்டு கச்சதீவு ஒப்பந்தத்தின் ஆறாவது சரத்தில் உள்ளபடி கச்சதீவு கடற்பரப்பில் தமிழக மீனவர்களின் மீன்பிடி நடவடிக்கையை உறுதிப்படுத்த வேண்டும்.

இலங்கைச் சிறையில் உள்ள 125க்கும் மேற்பட்ட இந்திய மீனவர்களையும், 190க்கும் மேற்பட்ட விசைப்படகு மற்றும் நாட்டுப்படகுகளையும் உடனடியாக மீட்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அதேபோன்று இந்திய நீதிமன்றங்களால் விடுதலை செய்யப்பட்டு தமிழக கடற்கரையில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள இலங்கை மீனவர்களின் மீன்பிடிப் படகுகளை மீண்டும் அவர்களிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இலங்கை நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்ட 10க்கும் மேற்பட்ட இந்திய மீன்பிடிப் படகுகளை மீட்க உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் உள்ளிட்ட வலியுறுத்தல்களை தமிழக மீனவர்கள் முன்வைத்துள்ளனர். (அ-ம-இ)

### 7 நாடுகளின்...

சந்திப்பு இடம்பெற்றதாக ஜனாதிபதியின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இதன்படி கியூபா, பிரிட்டன், அவுஸ்திரேலியா, சீனா, ஜப்பான், கனடா மற்றும் இந்தியா ஆகிய நாடுகளின் தூதுவர்கள் உள்ளிட்ட பிரதிநிதிகளை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

தூதுவர்களுடனான சந்திப்பில் இரு நாடுகளுக்கும் இடையிலான வலுவான இராஜதந்திர உறவுகளை மேலும் வலுப்படுத்தல், வெளிநாட்டு முதலீடுகளை ஈர்த்தல், சர்வதேச நாணயநிதியம் மற்றும் கடன் மறுசீரமைப்புச் செயற்பாடுகள், இலங்கையின் அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு, டிஜிற்றல் மயமாக்கல் திட்டங்களை நடைமுறைப்படுத்தல் உள்ளிட்ட பல விடயங்கள் கலந்துரையாடப்பட்டதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. (அ-ச)

### நாடாளுமன்றத்...

வரும் பின்னணியிலேயே, இதுவரை 37 பேர் கட்டுப் பணம் செலுத்தியுள்ளனர் என்ற தகவல் வெளியிடப்பட்டுள்ளது. (அ-ம-44)

### ரூபாவின்...

இதன்படி, அமெரிக்க டொலரின் விற்பனை விலை 300 ரூபாவுக்கும் குறைவாகப் பதிவாகியுள்ளதாக இலங்கை மத்தியவங்கி தெரிவித்துள்ளது.

நேற்றுப் புதன்கிழமை மத்தியவங்கி வெளியிட்டுள்ள நாணயமாற்று விகிதத்தின் அடிப்படையில் அமெரிக்க டொலரின் விற்பனை விலை ரூபா 299.35 என்றவாறாகவும், கொள்வனவு விலை ரூபா 290.30 என்றவாறாகவும் பதிவாகியுள்ளது. (அ-ம)

### ஒரு கோடியே...

வெளிநாட்டில் இருந்து வந்த ஒருவர் யாழ்ப்பாணத்தில் உள்ள தனது காணியை ஒரு கோடியே 7 லட்சம் ரூபாவுக்கு விற்றுவிட்டு, அந்தப் பணத்தை தன்னுடன் எடுத்துச் சென்றபோது, அவரைப் பின் தொடர்ந்து வந்த கொள்ளையர்கள் பணத்தை அவரிடம் இருந்து கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர்.

மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு வழங்கப்பட்டுள்ள நிலையில், மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ-ம-26-27)

### நாவாந்துறையில்...

யினரால் தீ கட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

தீ விபத்துக்கு காரணம் கண்டறியப்படாத நிலையில், யாழ்ப்பாண பொலிஸாரும் மற்றும் தடயவியல் பொலிஸாரும் மேலதிகவிசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ-ம-20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழருக்கான தீர்வை வழங்கின் இணைந்து செயற்படத் தயார்

## ஜனாதிபதி அநுரவுக்கான வாழ்த்துச் செய்தியில் யாழ். வணிகர் கழகம் தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், ஒக். 3**

**எமக்குரிய தீர்வுகளை எல்லாம் வழங்கி எம்மையும் இந்நாட்டின் சம பிரஜைகளாக ஏற்றுக்கொள்ளுமிடத்து உங்களுடன் இணைந்து நாமும் இந்த நாட்டை கட்டியெழுப்புவதற்கு ஆயத்தமாக இருக்கின்றோம் -இவ்வாறு ஜனாதிபதி அநுரகுமாரவுக்கு அனுப்பி வைத்துள்ள வாழ்த்துச் செய்தியில், யாழ்ப்பாணம் வணிகர் கழகம் தெரிவித்துள்ளது.**

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,தாங்கள் இந்த நாட்டின் ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டமைக்கு எங்கள் பாராட்டுகளை தெரிவித்துக்கொள்கின்றோம். நீண்ட காலமாக ஆட்சி முறைமை மாற்றத்துக்காகப் போராடிய தங்களுக்கு கிடைத்த இந்த வெற்றியானது நாட்டில் மிகப்பெரிய மாற்றங்களை ஏற்படுத்தும் என நாம் எண்ணுகின்றோம். இரண்டு முறை ஆயுத வழியில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த முயன்றும் தங்களின் அமைப்பு தோல்வி கண்டது. அதன் பின்பு தாங்கள் விரும்பிய ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த ஜனநாயக முறையில் நீங்கள் எடுத்த நீண்ட கால முயற்சியின் பின் இன்று இந்த நாட்டு ஜனாதிபதி தேர்தல் மூலம் உங்கள் கனவை சாத்தியமாக்கியுள்ளீர்கள். தமிழ் மக்கள் இன்றுவரையில் எல்லாவற்றிலும் புறக்கணிப் பையே எதிர்கொள்கின்றார்கள்.

இவை எல்லாவற்றையும் கருத்திற்கொண்டு தாங்கள் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை முன்னுரிமை அடிப்படையில் தீர்த்து வைப்பீர்கள் என்று நம்புகின்றோம். இதன் மூலம் தங்கள் தலைமையில் இந்த நாட்டில் ஒற்றுமையும் பொருளாதார மேம்பாடும் சுபீட்சமும் நிலவும்- என்றுள்ளது.

(ஒ-20)



# ‘தைகொண்டோ’ போட்டி சென்.பற்றிக்ஸ் வெண்கலம்

யாழ்ப்பாணம், ஒக். 3

ஆண்களுக்கான தேசிய மட்ட தைகொண்டோ போட்டியில் சென் பற்றிக்ஸ் கல்லூரி மாணவன் ஜோண்றஜீவ் பியன்பெனோ வெண்கலப்பதக்கம் வென்றுள்ளார். அகில இலங்கைப் பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட தைகொண்டோ போட்டிகள் இரத்தினபுரி புதிய நகர உள்ளக விளையாட்டரங்கில் அண்மையில் நடைபெற்றது. இதில் 18 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான 63 - 68 கிலோவுக்கு இடைப்பட்ட தைகொண்டோ போட்டியிலேயே மாணவன் ஜோண்றஜீவ் பியன்பெனோ வெண்கலப்பதக்கத்தை தனதாக்கியுள்ளார். (ச)

# இழுவைமடி மீன்பிடி கட்டுப்படுத்துங்கள்

## வடக்கு ஆளுநருக்கு மனு

சட்டவிரோத மீன்பிடித்தொழில்களை நிறுத்துமாறு கோரி வடக்கு மாகாண கடற்றொழிலாளர் இணையம் மற்றும் தீவகப் பகுதி மீனவர் அமைப்புகள் இணைந்து வடக்கு மாகாண ஆளுநரிடம் மனுவொன்றை நேற்றுமுன்தினம் கையளித்துள்ளனர்.

அந்த மனுவில்,

உள்ளூர் சட்டவிரோத இழுவைமடித் தொழிலாளர்களால் அனலைதீவு, எழுவைதீவு மீனவர்கள் தொடர்ந்து பாதிப்படைந்து வருகின்றனர். இலங்கையின் கடற்றொழில் சட்டங்களை மீறி சட்டவிரோதமான இழுவைமடி தொழில் யாழ். மாவட்டத்தில் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இந்தச் சட்டவிரோத நடவடிக்கையை நிறுத்துவதற்கு உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-22-20)

# பலஸ்தீன ஆதரவாளர் சிறையிடப்படுவார்கள்

## சவூதி எச்சரிக்கை

ரியாத், ஒக். 3

சவூதி அரேபியாவில் பலஸ்தீனத்துக்கு ஆதரவாக ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவோர் கைது செய்யப்படுவர் என சவூதி இளவரசர் சல்மான் அறிவித்துள்ளார்.

பலஸ்தீனத்துக்கு ஆதரவாக பள்ளிவாசல்களில் தொழுகை நடத்துவோரும் கைது செய்யப்படுவர்.

வெளிநாட்டு தொலைக்காட்சி ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே இளவரசர் சல்மான் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இளவரசர் சல்மானின் இந்த அறிவிப்பை சவூதி அரேபிய மக்கள் வரவேற்றுள்ளனர். (ச-6)

# மூன்றிலிரண்டு பெரும்பான்மை தே.ம.ச. பெற்றால் ஆபத்து!



## கம்மன்பில தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 3

பொதுத்தேர்தலில் தேசிய மக்கள் சக்திக்கு சாதாரண பெரும்பான்மை பலமே கிடைக்கப்பெறவேண்டும். மாறாக மூன்றிலிரண்டு பெரும் பான்மை கிடைத்தால் அது நாட்டுக்கு ஆபத்தானது என்று பிவிதுரு ஹெல உறுமயவின் தலைவரும், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

நாட்டில் ஜனாதிபதித் தேர்தல் நடந்து முடிந்த கையோடு பொதுத்தேர்தல் நடத்தப்பட்டுள்ள சந்தர்ப்பங்களில் எல்லாம் ஜனாதிபதித் தேர்தலில் வென்ற கட்சியே நாடாளுமன்றத் தேர்தலிலும் வென்றுள்ளது.

அந்தவகையில் வருகின்ற பொதுத்தேர்தலில் எவ்வித தடையுமின்றி சாதாரண பெரும்பான்மையை பெறுவதற்குரிய வாய்ப்பு தேசிய மக்கள் சக்திக்கு உள்ளது.

தேசிய மக்கள் சக்திக்கு பெரும்பான்மை கிடைக்கப்பெறவேண்டும். அவ்வாறு அல்லாவிட்டால் நாட்டில் ஸ்திரமற்ற நிலை ஏற்படக்கூடும்.

அதேபோல அக்கட்சியினருக்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மை கிடைக்கப்பெறக்கூடாது.

இலங்கை வரலாற்றில் மூன்றிலி ரண்டு பெரும்பான்மை பலம் கிடைக்கப்பெற்ற சந்தர்ப்பங்களில் கட்சிகள் அரசாங்கத்தையும் இல்லாது செய்து, நாட்டையும் நாசமாக்கியுள்ளன.

1977 ஜே.ஆர். ஜயவர்த்தன ஆட்சி, 2010 இல் மஹிந்த ஆட்சி மற்றும் 2020 கோத்தா ஆட்சியில் அது நடந்துள்ளது என்று அவர் குறிப் பிட்டார். (ச-44)

# மீண்டும் சிலிண்டர்

ஸ்ரீலங்கா ஜனாதிபதித் தேர்தலில், முன்னாள் ஜனாதிபதிரணிலை ஆதரித்துக் களமிறங்கிய தரப்பினர், சிலிண்டர்சின்னத்திலேயே பொதுத்தேர்தலையும் எதிர்கொள்ளவுள்ளதாக அறிவித்துள்ளனர். சிலிண்டர் சின்னம் 20 லட்சத்துக்கும் மேற்பட்ட மக்களிடையே சென்றடைந்துள்ள நிலையில், அந்தச் சின்னத்தில் களமிறங்கினால் தமக்கு வெற்றி வாய்ப்பு அதிகம் என்று கருதியே ரணில் தரப்பினர் இந்த நகர்வை மேற்கொண்டுள்ளனர் என்றுசுட்டிக்காட்டப்படுகிறது. (ம)


**வீடு வாடகைக்கு தேவை**

மூன்று பேர் கொண்ட சிறிய குடும்பம் வசிப்பதற்கு யாழ்ப்பாணத்தில் வீடு வாடகைக்குத் தேவை.

தொடர்பு: 077 959 5930

**வேலையாட்கள் தேவை**

யாழ். நகரில் உள்ள உணவகம் ஒன்றிற்கு பின்வரும் வேலையாட்கள் தேவை.

- காசாளர்
- சமையல் உதவியாளர்
- உணவு பரிமாறுபவர்

ஆண் / பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

077 314 7580

(CS/56353) J-1

**வேலையாட்கள் தேவை**

யாழ் நகரில் இயங்கும் பான்சி கடைக்கு வேலையாட்கள் தேவை. ஆண். பெண் இருபாலாரும் அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை

(தகுந்த சம்பளம் வழங்கப்படும்)

தொடர்பு: 077 132 4319

**Vacancies**

Office Admin, Data Entry, Accounts, IT Officer, Telephone Operator, Receptionist, Management Trainee, Supervisor, Cashier, Manager, Marketing Executive, E-Commerce Executive, Digital Marketing Executive, Online Customer Service Executive, Software Developer, Web Developer

077 773 3368, 074 162 1632

**வீட்டுடன் காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் சுண்டிக்குளியில் (கோவிற்பற்று, சுண்டிக்குளி இறை, சுண்டிக்குளி வடக்கு) அமைந்துள்ள 01 நிலப்பரப்பு 5.19 குளி கொண்ட காணி வீட்டுடன் விற்பனைக்கு உண்டு.

074 260 0470, 076 400 2218

(CS/56349) J-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 03.10.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.